விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 03 வெள்ளிக்கிழமை (19.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# இந்தியாவின் கையை மீறியே இலங்கையில் போர் நடந்தது

## தவறான தகவல்களை மகிந்த வழங்கிவிட்டார் -நிருபமா ராவ்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தம் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மட்டுமே நடத்தப் பட்டது. அப்பாவி மக்கள் மீது எங்களுக்கு கோபம் இல்லை. விடுதலைப்புலிகள் மனித கேடயமாக பயன்படுத்திய சில நூறு அப்பாவிகள் மட்டுமே இறந்திருக்கிறார்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தலைமையிலான அமைச்சரவை கூறியது. அதனை இந்தியாவும் நம்பியது என்று அமெரிக் காவுக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதி முறைமையை ஒழித்திருப்பேன்!-சரத்



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது வெற்றி கொள்ளை அடிக்கப்பட்டிருக்காவிடின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டிருக்கும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தேசிய பிக்கு முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் இடம்பெற்ற மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பொன்சேகா மேலும் கூறியதாவது,

அவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் மூவர் கட்சியிலிருந்து நீக்கம்

சரத் பொன்சேகா தலைமையில் நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டமைக்காக ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர்.

ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார, பி.தேவரப்பெரும மற்றும் ஏ.அபேசிங்க ஆகியோரே தற்காலிகமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-1)

## சில பரிந்துரைகளை அமுல்படுத்தவில்லை

மனித உரிமை மீறல் தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்து செய்யப்படும் 30 வீதமான பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதில்லை என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அநேகமான முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு செய்யப்படும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்ட போதிலும், 30 வீதமான பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி சமந்தி ஜயமஹா தெரிவித்துள்ளார்.

அமுல்படுத் (20ஆம் பக்கம் பார்க்க)

## துப்பரவற்ற காணிகளில் அவசர மீள்குடியேற்றம்

### மக்களின் நிலைகுறித்து அமெ. கவலை

இலங்கை அரசாங்கம் மெனிக் பாம் முகாமை மூடுவதற்கு இடம்பெயர்ந்த மக்களை துப்பரவற்ற காணிகளில் அவசர அவசரமாக குடியேற்றியமை தொடர்பாக அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்து வருகின்ற மக்களுக்கு ஆதரவளித்து வருகின்ற மூன்று அமைப்புக்களுக்கு அமெரிக்க அரசாங்கமானது அண்மையில் 3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான நிதி உதவியை வழங்கியுள்ளது.

ஏறத்தாழ 50 ஆயிரம் இலங்கையர்களுக்குப் போதுமான வதிவிட வசதிகளை அமைத்தல், சுத்தமான குடிநீரை வழங்கல், முறையான மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற அடிப்படைச் சேவைகளை வழங்க இந்த நிதியுதவி துணைபுரியும்.

26 வருட கால மோதல்களை தொடர்ந்து பெருந்தொகையான உள்ளக இடம்பெயர்விற்கு உள்ளானவர்களை துரிதமாக மீளக் குடியமர்த்துவதில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட பணிகளை அமெரிக்க அரசாங்கம் வரவேற்கின்றது.

இருந்தபோதிலும் மெனிக் பாம் மூடுவதற்காக அங்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நெசவுக் கம்பனிகள் யாழில் ஆரம்பிக்க நடவடிக்கை

### இந்திய துணைத் தூதுவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இந்திய நெசவுக் கம்பனிகளை திறப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, இந்திய உற்பத்தி பொருட்களை யாழ்.குடாநாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளும் தற்போது இடம்பெற்று வருகின்றது என யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்புக்கு கடந்த மாத முற்பகுதியில் வருகை தந்த இந்தியாவின் தமிழ்நாட்டு வர்த்தக சங்க பிரதிநிதிகளும், வர்த்தக கம்பனிகளின் அதிபர்களும் யாழ்.வணிகர் கழகத்தின் தலைவர் மற்றும் இந்திய துணைத் தூதுவர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு குடாநாட்டில் வர்த்தக நடவடிக்கையினை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது இந்திய வர்த்தக கம்பனிகள் குடாநாட்டில் தமது கிளைகளை ஆரம்பிக்க முடியும் எனவும், குடாநாட்டிற்கு காங்கேசன் துறைமுகம் ஊடாக நேரடியாக பொருட்களை இறக்குமதி செய்தால் தேவையற்ற செலவினங்களை குறைக்கமுடியும் எனவும் கூறப்பட்டது.

இதையடுத்து நேற்று முன்தினம் யாழ்.வணிகர் கழக (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் பயிற்சிகள் சிறப்பானது -இராணுவம்

இந்திய இராணுவம் வழங்கும் பயிற்சிகள் தரமானவை என்று சான்றிதழ் கொடுத்துள்ளது இலங்கை இராணுவம்.

இது குறித்து இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்ததாவது,

தமிழ் நாட்டில் எமக்கு பயிற்சி கொடுக்கப்படுவது குறித்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஆனால் அதற்காக எமக்கு வழங்கப்படும் பயிற்சியின் தரத்தில் இந்தியா எந்தக் குறையும் வைக்கவில்லை. நவீன பயிற்சி முறைகளுடன் கூடிய இந்தப் பயிற்சி, எமது இராணுவ நிபுணத்துவத்தை உயர்ந்த தரத்தில் பேணுவதற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## தள்ளிப்போகும் கூட்டுப் பயிற்சி

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் இலங்கையுடனான இராணுவ உறவுகளை கடுமையாக எதிர்க்கும் நிலைமையில், இலங்கையுடனான கூட்டுப் பயிற்சிகளை நான்கு தென்மாநிலங்களிலிருந்து தூரமான இடத்தில் நடத்துமாறு இந்திய கடற்படைக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இனிமேல் இலங்கையுடனான இந்த கடற்படை பயிற்சிகளை தென்இந்தியாவின் கரையிலிருந்து வெகு தூரத்தில் நடத்துமாறு இந்திய பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை கூறியுள்ளதாக இந்திய கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ந-1)

## ரூ.5 லட்சம் சன்மானம்

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுல திலகரட்ண மீதான தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர் தொடர்பில் தகவல் தெரிவிப்பவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

மேற்படி தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் மாதிரி உருவத்தை வெளியிட்டுள்ள பொலிஸ் தலைமையகம், அச்சந்தேக நபர் தொடர்பான தகவல்களை பொதுமக்களிடமிருந்து கோரியுள்ளது. (ந-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச ஏடுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நவராத்திரியை முன்னிட்டு, மதுரம் கிட்ஸ் முன்பள்ளி நிர்வாகத்தினரால் ஏடு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஏடு தேவைப்படும் சமய நிறுவனங்கள், பாடசாலைகள், முன்பள்ளிகள் எண்பனடச்சுவீதி, கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள மதுரம் கிட்ஸ் முன்பள்ளியில் பெற்றுக்கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ந-2)

## பரிசளிப்பு நிகழ்வு

(புளியம்பொக்கணை)

தேசிய சேமிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிளி/முருகானந்தா கல்லூரியில் ஆசிரிய நூலகர் திருமதி ரா.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-3,263)

## அபி. சங்கங்களை ஆரம்பிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மேற்கு ஜே/233, காங்கேசன்துறை மத்தி ஜே/234, காங்கேசன்துறை தெற்கு ஜே/235 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கான கிராமிய அபிவிருத்திச் சங்கங்களை ஆரம்பிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில்மேற்படிகிராம அலுவலர்பிரிவுகளைச் சேர்ந்த 18 வயதிற்கும் மேற்பட்டோரை கலந்து கொள்ளுமாறு காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக செயலாளர் இ.விஜய் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-9)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய ஸ்ரீமுருகன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் வே.த.ஜயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (ந-9)


### காணவில்லை

JM 3638 என்ற இலக்கமுடைய லொறி வாகன வரி அனுமதிப்பத்திரம் யாழ்ப்பாணத்தில் 13.10.2012இல் காணாமல் போய்விட்டது.

கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் :-
0212228754

(785)

### பருவகால மலிவு விற்பனை

பவிசாறு பூங்கனிச் சோலை

பதிவு இல : SA 1 / JFA / 02677

311/1 பலாலி வீதி, 0212228199
கோண்டாவில், 0718475629
யாழ்ப்பாணம். 0773976203

கத்தரி, தக்காளி, மிளகாய், கறிமிளகாய் போன்ற நாற்றுக்கள், விதைகள், பூ மரக்கன்றுகள், பழ மரக்கன்றுகள், இந்தியன் முருங்கை, பயன் தரு மரங்கள், தென்னம்பிள்ளை என்பன விற் பனைக்குண்டு. (783)

### செல்லா சினிமா- யாழ்ப்பாணம்





# கடையை உடைத்து திருட்டு முயற்சி!

## அயல் வீட்டாரால் தடுக்கப்பட்டது களவு

(யாழ்ப்பாணம்)

அயல் வீட்டாரின் புத்திசாதுரியமான செயலினால் இரு இலத்திரனியல் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இத்திருட்டு முயற்சிச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை வேளை நல்லூர் முன்வீதியிலுள்ள கடை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கடைக்கு ஆட்டோ ஒன்றில் வந்த திருடர் கும்பல் கடையின் கதவினை உடைத்துள்ளனர்.

கடையின் கதவு உடைக்கப்படும் சத்தத்தினைக் கேட்ட அயல்வீட்டுக்காரர் குறித்த கடையின் உரிமையாளருக்கு உடனடியாக தொலைபேசி மூலம் சம்பவத்தினை தெரிவித்துள்ளனர்.

உடனடியாக கடை உரிமையாளர் தனது கடைக்கு விரைந்த போது உரிமையாளரினை கண்ட திருடர்கள் திருடிய பொருட்களினையும் கைவிட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டதோடு திருடர்களின் தடயங்களினையும் ஆராய்ந்தனர்.

இதேவேளை, இத்திருட்டு முயற்சி இடம்பெற்ற நேரத்தில் நாவலர் வீதியிலுள்ள தொலைபேசி விற்பனைக் கடையொன்றிலும் 3 இலட்சம் பெறுமதியான கணணி உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் திருடர்களினது காலமும் ஆரம்பித்துள்ளதாகவும் இத்திருட்டுக்கள் தொடர்பில் அயலவர்கள் விழிப்புடன் இருத்தல் வேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

# ஒரே கடையில் ஒருவாரத்தில் இரு திருட்டுச் சம்பவங்கள்!

## யாழ்.நகரில் துணிகரம்

(யாழ்ப்பாணம்)

ஒரே கடையில் ஒரு வாரத்திற்குள் இரு தடவைகள் பல இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய இலத்திரனியல் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

யாழ்.நாவலர் வீதியிலுள்ள தொலைபேசிகள் மற்றும் கணிணி உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையமொன்றிலேயே இவ்விரு திருட்டுச்சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கடந்த 13-ம் திகதி குறித்த கடையின் கதவு உடைக்கப்பட்டு அதிகாலை வேளையில் 17 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய கணணி உதிரிப்பாகங்கள், தொலைபேசிகள் என்பன திருடப்பட்டிருந்தன.

இத்திருட்டுத் தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகள் நிறைவுறாத நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலையும் அதேகடையில் மற்றொரு திருட்டுச்சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டில் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய தொலைபேசிகள், லப்டப் கணணிகள் என்பன திருட்டுப் போயுள்ளன.

இவ்விரு திருட்டுக்கள் தொடர்பிலும் சம்பவ இடத்திற்கு யாழ்.பொலிஸார் நேரில் சென்று விசாரணைகளினை மேற்கொண்டதோடு கைரேகைகளினையும் பதிவு செய்தனர்.

மேலும் இவ்வாறு ஒரே கடையில் குறுகிய நாட்களுக்குள் இரு தடவைகள் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை சந்தேகத்தினை ஏற்படுத்துவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)


### சேவை நலன் பாராட்டு

செல்வி தற்பரானந்தம் சிவானந்தம்



சேவை விபரம் :
1. யா/பொன்னாலை வரதராஜ பெருமாள் வித். - 02.05.74 - 01.07.74
2. யா/வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம் - 01.07.74 - 31.07.79
3. யா/பலாலி G.T. கல்லூரி - 01.08.79 - 31.12.79
4. யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி - 01.01.80 - 31.12.80
5. யா/பலாலி G.T. கல்லூரி - 01.01.81 - 31.12.81
6. மு/முள்ளிவாய்க்கால் G.T.M.S. - 01.01.82 - 29.02.84
7. மு/முல்லைத்தீவு ம.வி. - 01.03.84 - 31.03.89
8. யா/வட்டு இந்துக் கல்லூரி - 01.04.89 - 01.10.2012

எமது கல்லூரி ஆசிரியை செல்வி த.சிவானந்தம் அவர்கள் 01.10.2012 அன்று சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். இவரை இந்நாளில் நாம் விழா எடுத்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/வட்டு இந்துக்கல்லூரி, சித்தன்கேணி.

(781)


## வாணி விழாவும் வித்தியாரம்பமும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் வாணி விழா நிகழ்வும் வித்தியாரம்பமும் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் மாலை 5 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் இரவு 7.15 மணிவரை நடைபெறவுள்ளன.

இதில் கலாபூஷணம் வி.கே.பஞ்சமூர்த்தி தலைமையிலான மங்கல இசை, இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் வழங்கும் மிருதங்க இசை, ஈழ நல்லூர் சாரங்கன் இசைக்கல்லூரி மாணவிகள் வழங்கும் இசையரங்கு, திருநெல்வேலி சைவச்சிறுவ இல்ல மாணவிகள் வழங்கும் நடன நிகழ்ச்சி, 'சரஸ்வதி சபதம்' எனும் தலைப்பிலான வில்லுப்பாட்டு மற்றும் செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனத்தின் இசைக்கச்சேரி ஆகியன நடைபெறவுள்ளதாக மன்ற நிர்வாகம் அறிவித்துள்ளது. (ந-9)

## பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வை.எம்.சி.ஏ யினால் நாளை 20-ம் திகதி இரத்ததானம் செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

எனினும் இந்நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் அடுத்த மாதம் 10-ம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என பருத்தித் துறை வை.எம்.சி.ஏ.செயலாளர் டி.எம்.வேதாபரணம் தெரிவித்துள்ளார். (ந-8)


### சித்தன்கேணி சிவன்கோவில்
### அமரர் சிவஸ்ரீ.த.ஞானபண்டிதக்குருக்கள் அவர்களின் 30ஆவது ஆண்டு நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும்

காலம் – 20.10.2012 சனிக்கிழமை

தலைவர் – பிரம்மஸ்ரீ.சபா.உமாபதி சர்மா

தலைமை – திரு.சி.சுந்தரேஸ்வரன்
(முகாமையாளர் HNB யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர் – வணக்கத்திற்குரிய ஜாக்ரசைதன்ய சுவாமிகள் – சின்மயாமிசன்

மாலை – 3.30 மணி முதல்

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இருந்து சைவபண்பாட்டுப் பேரணியுடன் விழா ஆரம்பம்.

மாலை 4.30 மணிமுதல்

சித்தன்கேணி மஹாகணபதிப்பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகும். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு, விருந்தினர்கள், நடுவர்கள் கௌரவிப்பு, ஞானரத்தின பைரவ கீதங்கள் இறுவெட்டு வெளியீடு, நடன நிகழ்வுகள் வலி மேற்குப் பிரதேச சமய சமூக சேவைக்கான கௌரவ ஞானரத்தின உயர்விருது வழங்கல் மற்றும் இசைக்கலைமணி ந.செல்வச்சந்திரன் பின்னணியில் S.G.சாந்தன், ஜெயாசுகுமார் மற்றும் பல கலைஞர்கள் இணைந்து வழங்கும் கானமழை இசை நிகழ்வு முதலியன சிறப்பாக நடைபெறவுள்ளன

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிகழ்வுகளை– WWW.SIVANTV.COM இல் பார்வையிடலாம்

சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்,
பிரம்மஸ்ரீ.சபா.உமாபதிசர்மா
ஞானரத்தின அமைப்பாளர்கள்
சிவன்கோவில், சித்தன்கேணி.

(சி-1388)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உணவுப் பாதையிலே வெப்பநிலை

"ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கக்கூடாதா?" என்பது பழமொழி.

நம்மிலே ஆறப்பொறுத்தவர்கள் பலபேர் இருக்கிறார்கள். சூடாகவே அனைத்தையும் சாப்பிடுபவர்கள் இவர்கள்.

மிகவும் சூடான கோப்பியை அவர்கள் முன்னால் வையுங்கள்... அடுத்தவர்கள் யாரும் அதை எடுத்துக் குடிப்பதற்கு முன்பே அவசரப்பட்டு "டபக்" என்று எடுத்து "லபக்" என்று குடித்து முடித்து விடுவார்கள்.

இப்படி சூடாக குடிப்பது வயிற்றில் உள்ள உறுப்புகளுக்கு கெடுதல் உண்டாக்கும்.

கொதிக்கக் கொதிக்க ஒருவர் ஒரு கோப்பை கோப்பியை அவசர அவசரமாகப் பருகுகிறார் என்றால்- அவ்வேளையிலே அவரது குடல் படாத பாடுபடும்.

முக்கியமாக அந்த உணவுக் குழல் இருக்கிறதே அது சூடு தாங்காமல் துடிதுடிக்கும்.

உணவுக்குழாயோடு மேற்புறப்பகுதி ஒருசில விநாடிக்கள் கிட்டத்தட்ட 60 டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக்கு வந்து விடும். அதாவது இரண்டு மடங்கு வெப்பநிலைக்கு வந்து விடும்.

இதேமாதிரி ஐஸ்கிறீம் சாப்பிடும் போதும் கிட்டத்தட்ட உறைய வைத்து விடும். மறுபடியும் பழைய நிலைக்கு வருவதற்கு சிறிது நேரம் ஆகும். இதனாலே வயிறும் குடலும் கெட்டு... பெட்டிக் அல்சரும் வேறு பல வயிற்றுக் கோளாறுகளும் ஏற்படுத்துவதற்கு வழி சமைத்து விடும்.

இது தொடர்பான பரிசோதனை ஒன்றை பிரிட்டன் விஞ்ஞானிகள் குழுவினர் செய்தார்கள்.

ஒரு மெல்லிய குழாயை எடுத்து அதிலே ஆறு நுண்ணிய வெப்ப மின்னிரட்டை வெப்பநிலைமானிகள் பொருத்தி இருப்பார்கள்.

இந்தக் குழாயை நோயாளியின் தொண்டை வழியாக வயிற்றுக்குள்ளே இறக்க வேண்டும். அது உள்ளே போய் சமிபாட்டுப் பாதையிலே பல்வேறு இடங்களிலே உள்ள வெப்பநிலையை மிகவும் துல்லியமாகக் காட்டும்.

இப்படியாக சமிபாட்டுப் பாதையிலே வெவ்வேறு இடங்களிலே உள்ள வெப்பநிலையைக் கண்டுபிடிப்பதற்கு மிக நீண்ட நாளாகவே பலவிதமான உத்திகளைக் கையாண்டு வருகிறார்கள்.

கடந்த நூற்றாண்டிலே ஆராய்ச்சியாளர் ஒருவர் இருந்தார். அவர் வித்தைக்காரன் ஒருவனை அழைத்து வந்தார். அந்த வித்தைக்காரன் எப்படியென்றால்... ஒரு பெரிய பட்டாக்கத்தியையே விழுங்கி அதன்பின் அதை வெளியே அப்படியே எடுத்துக் காட்டுபவன்.

அப்படியெல்லாம் இவரிடம் வித்தைகள் உள்ளன.

இவருடைய ஆராய்ச்சிக்கு அது மாதிரியான நபர் தானே தேவை. அதனாலே அவரை அழைத்து வந்தார்.

ஒரு நீளமான வெப்பமானியைக் கொடுத்து விழுங்கச் சொன்னார். கத்தியையே விழுங்குபவருக்கு இதை விழுங்குவது கஷ்டமாகவா இருக்கும்? அவருக்கு இது அல்வாத்துண்டு சாப்பிடுவது போல் இருக்கும்.

அவருடைய வயிற்றினுள் வெப்பநிலைமானியைச் செலுத்தி வயிற்றின் வெப்பநிலையைத் தெரிந்து கொண்டார்.

இப்போதெல்லாம் இப்படியான வித்தைக்காரர்கள் கண்ணில் புலப்படுவது அருமையாகவுள்ளது.

ஆகவே, எந்தவொரு ஆகாரத்தையும் அதிக சூடாகவோ அதிக குளிர்ச்சியாகவோ சாப்பிடக்கூடாது. அபூர்வமாக சில பேருக்கு உடம்பு ஒத்துவரும்...

அதனாலே அப்படி சாப்பிட்டாலும் எதுவும் செய்யாது.... அதற்காக எல்லோரும் அதே வழியிலே போக முடியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# லலித், குகன் காணாமற்போனமை குறித்து பாதுகாப்பு செயலாளரிடம் முறையிட்டோம்

## உதுல் பிரேமரட்ன சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் போராட்ட இயக்கத்தின் அங்கத்தவர்களான லலித், குகன் யாழில் காணாமற்போன பின்னர் இது தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் பொலிஸ் தலைமையகத்திலும் முறையிடப்பட்டதாக மக்கள் போராட்ட இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ன தெரிவித்தார்.

காணாமற்போன லலித், குகன் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் உதுல் பிரேமரட்னவினுடைய சாட்சியம் பதிவு செய்யப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் சாட்சியமளிக்கையில்,

நான் 5 வருட காலமாக சட்டத்தரணியாக கடமையாற்றி வருகின்றேன். அத்தோடு நாம் இலங்கையர் என்ற அமைப்பின் நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்களாகவும் உள்ளோம்.

இவ் அமைப்பின் நோக்கங்களாக இலங்கையில் தேசிய அமைதியினை உருவாக்குதல், காணாமற்போனோர் தொடர்பில் தேடியறிதல், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தல், அரசியல் கைதிகளுக்கு சட்ட உதவிகளை வழங்குதல், வடக்கிலுள்ள அகதிகள் தொடர்பில் ஆராய்தல் போன்றன உள்ளன.

இவ் அமைப்பில் சட்டக்கல்லூரி மாணவர்கள், மனிதவுரிமைகள் அமைப்பிலுள்ளோர் உறுப்பினர்களாக உள்ளதோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட 15 உறுப்பினர்களை இவ் அமைப்பு கொண்டுள்ளது.

இவ் அமைப்பிலும் முற்போக்கு சோசலிசக் கட்சியும் இணைந்து கடமையாற்றும் போதுதான் கடந்த வருட மனிதவுரிமைகள் தினத்தில் லலித்குமார் காணாமற்போனதோடு அவரது சகபாடியான குகனும் காணாமற்போயிருந்தார்.

இவ்விருவரும் காணாமற்போன பின்னர் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, லலித், குகன் ஆகியோர் காணாமற்போகவில்லை என்றும் அவர்கள் இருக்கின்றனர் என கூறியதாகவும் பிரேமரட்ன தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

மன்றில் லலித்குமார் பங்கேற்றிருந்த ஆர்ப்பாட்ட புகைப்படங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஜனவரி 17 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றினை யாழில் நடத்துவதற்காக 13 பேருந்துகளில் வருகை தந்திருந்த முன்னிலை சோசலிசக் கட்சியினரை இராணுவத்தினரும் பொலிஸாரும் தடுத்து நிறுத்தி திருப்பியனுப்பப்பட்ட புகைப்படங்களும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

சாட்சிய முடிவில் வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் குறித்த வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக மார்கழி மாதம் 13 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவித்தார்.

குறித்த வழக்கின் மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான நுவான் போப்பகே, கு.குருபரன் ஆகியோரின் அனுசரணையில் நிரான் அன்கிட்டேலும் எதிர்மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ஜெயவிக்கிரமவும் அரச சட்டவாதி செகாண்டி சில்வாவும் ஆஜராகியிருந்தனர். (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 30-50 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 30-40 | 70 |
| தக்காளி | 50 | 40 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 30 | 40 |
| கோவா | 90 | 60 | 60 | 80 |
| கரட் | 100 | 80 | 70-80 | 120 |
| பூசணி | 65 | 30 | 35-40 | 40 |
| புடோல் | 55 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 45 | 50 | 25-30 | 60 |
| சின்ன வெங்காயம் | 85 | 70 | 65 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 50 | 40-60 | 60 |
| பாகற்காய் | 140 | 110 | 70-100 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 20-30 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 30-50 | 90 |
| லீக்ஸ் | 100 | 110 | 80 | 110 |
| பீற்றூட் | 80 | 40 | 40 | 50 |
| கறிமிளகாய் | 100 | 70 | 80 | 110 |
| முருங்கைக்காய் | 80 | 90 | 30-40 | 40 |
| போஞ்சி | 110 | 110 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | -- | -- |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 280 | 200 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 28-35 | 28-30 |

# இராசி பலன்

*19.10.2012*
*(ஐப்பசி 03, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*சதுர்த்தி முற்பகல் 9.31 மணிவரை*
*கேட்டை பின்னிரவு 2.14 மணிவரை*
*இராகுகாலம் 10.32-12.02 மணிவரை*
*சுபநேரம் 6.02-7-32 மணிவரை*

**மேடம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியத்தில் சில தாமதங்கள் ஏற்படலாம், தேகாரோக்கியத்தில் அக்கறை கொள்ள வேண்டிய நாள்.

**இடபம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், தெய்வ சிந்தனை அதிகரிக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மிதுனம்** ஆரோக்கியமான நாள் ,தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், வழிபாட்டால் அமைதி கூடும், மனதில் உற்சாகம் பிறந்து மகிழ்ச்சி கூடும்.

**கடகம்** தொழில் நலன் கருதி பிறரிடம் ஆலோசனை கேட்பீர்கள், பூர்வ புண்ணிய கருமங்களில் அதிக நாட்டம் காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**சிங்கம்** சுபநிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், தொழில் நன்மையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சுபசெலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**கன்னி** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்,புதிய பொருட்கள் வாங்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும்.

**துலாம்** கற்பனை மிகுதியான நாள், வாக்கு மேன்மையுண்டு,புதிய தகவல்கள் வந்து சேரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க வேண்டி வரலாம், போசன சுகமுண்டு, ஆரோக்கியம் சீராகும்.

**தனுசு** காரிய அலைச்சல் அதிகரித்தாலும் சிறு ஆதாயம் பெறுவீர்கள், உறவினர் வழியில் சிறுவிரயங்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள்.

**மகரம்** எடுத்த காரியம் நன்மையில் முடிவடையும், நன்மைகள் அதிகரிக்கும்,பொருளாதார நிலை உயர்வடையும்,குடும்ப ஒற்றுமை பலப்படும்,மகிழ்வும் மரியாதையும் உயரும்.

**கும்பம்** எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராகி உற்சாகமடைவீர்கள்,சுபசெய்திகள் வந்து சேரும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** எதிர்பாராத பயணங்கள் ஏற்படலாம், தந்தைவழி உறவினர்களால் நன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்களை முடிக்க அதிக பிரயாசை எடுப்பீர்கள்,அதிகாரிகளின் வெறுப்புக்கு உள்ளாகாமல் இருப்பது நல்லது.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளின் தொல்லையால் அழிவடையும் பயிர்ச்செய்கை


## காரைநகரின் பரிதாபம்

(காரைநகர்)

காரைநகரில் கட்டாக்காலி கால்நடைகளால் காலபோக பயிர்ச்செய்கை முற்றாக அழிவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கடும் வரட்சி நிலவிய போதிலும் அண்மையில் சில நாட்களாக பெய்த மழையினால் சுமார் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட ஏக்கர் விளைநிலங்கள் நெற்பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டன.

சுமார் 500 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் மேற்படி பயிர்ச்செய்கையை அழித்து வருகின்றன. இக்கட்டாக்காலி கால்நடைகள் தொடர்பாக விவசாய சம்மேளனங்கள், கமநல சேவை நிலையம், பிரதேச சபை மற்றும் கிராம சேவையாளர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தியும் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் விரைந்து நடவடிக்கை எடுத்து உதவுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-246)



# யாழ்.மக்களின் வர்த்தகத்திற்கு ஆப்பு வைக்கும் தென்பகுதி வர்த்தகர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு வர்த்தகர்கள் தொழில் நடவடிக்கைகளிலிருந்து முற்று முழுதாக விலகி வருவதாக தெரிவிக்கப்படுகிறன்றது.

தென்னிலங்கை வர்த்தகர்களின் வருகையும் முகவர்களின் அடாவடித்தனங்களினாலும் கடன் தொல்லைகளினாலுமே வர்த்தகர்கள் தொழில் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிக் கொள்வதாக கூறப்படுகின்றது.

நாட்டில் இடம்பெற்ற நீண்ட கால் யுத்தத்தின் பல அழிவுகளை எதிர்கொண்ட வர்த்தகர்கள் வங்கிகள் ஊடாகவும் ஏனைய நிறுவனங்களினூடாகவும் கடன் உதவிகளை பெற்று வர்த்தக நடவடிக்கைகளை துரிதப் படுத்தியிருந்தனா.

இருப்பினும் ஏ-9 பிரதான வீதி திறக்கப்பட்டு போக்குவரத்து இலகுபடுத்தப்பட்ட பின்பு தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வர்த்தகர்களின் அதிக வருகையினால் குடாநாட்டு வர்த்தகர்களின் தொழில் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைகளுக்கு முறைப்படி, வரிகட்டி குத்தகைக்கு கட்டடங்களை பெற்று தொழில் நடவடிக்கையில் குடாநாட்டு வர்த்தகர்கள் ஈடுபட்டு வரும் நிலையில் தென்னிலங்கை வர்த்தகர்கள் எவ்வித அனுமதியும் பெறாது சபைகளுக்கு வரி செலுத்தாது அடாத்தாக அங்காடி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குடாநாட்டு மக்களும் அவர்களிடம் பொருட்களை கொள்வனவு செய்வதிலேயே அதிக ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

பொருட்களை கொள்வனவு விலையிலும் பார்க்க குறைந்த விலையில் விற்பனை செய்து எமது பிழைப்பில் மண்ணை அள்ளி போடுகின்றனர்.

இது இவ்வாறு இருக்கையில் தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் வர்த்தக முகவர்கள் அடாவடித்தனத்தில் ஈடுபடுகின்றனர். தரம் குறைந்த பொருட்களை எம்மிடம் கொடுத்து ஏமாற்றுகின்றதோடு பணத்தினை செலுத்துவதற்கு போதுமான கால அவகாசம் வழங்குவதாக கூறிவிட்டு குறுகிய காலத்துக்குள்ளேயே வந்து பணத்தை தருமாறு அடவடித்தனம் செய்வதோடு பொலிஸில் முறைப்பாடு செய்வோம் எனவும் மிரட்டுகின்றனர்.

கடந்த காலத்தில் மிகவும் நிம்மதியாக, கௌரவமாக தொழில் செய்து வந்த எம்மீது இப்போது பல அழுத்தங்கள் பிரயோகிக்கப் படுகின்றன என குடாநாட்டு வர்த்தகர்கள் கவலையுடன் தெரிவித்திருந்தனர்.

மேலும் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் தமது கிளைகளை இங்கு ஸ்தாபிக்கவுள்ளன. எதிர்காலத்தில் நாம் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடமுடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல வர்த்தகர்கள் கடன் தொல்லை, வியாபாரமின்மை காரணமாக வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி விட்டனர். சிலர் தூக்குப்போட்டு இறந்துமுள்ளனர். இன்னும் பலர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் வர்த்தகர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். இந்நிலை தொடர்ந்தால் குடாநாட்டில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர்கள் முற்று முழுதாக விலகுவார்கள் அல்லது ஒதுக்கப்படுவார்கள்.

அதிலும் குறிப்பாக யாழ். நகரப்பகுதி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களே அதிக பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# தேசிய மட்டத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)



கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே மாவட்ட, தேசிய ரீதியில் சிறுகதை ஆக்கப்போட்டியில் மேற்பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மாணவன் விமலாம்பிகைபாகன் திவாகரன் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். (அ-2)

# விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேர மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும் என யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அறிவித்துள்ளார். (அ-3)

# மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அகில இலங்கை இந்து சமய பொது அறிவுப்போட்டி பரீட்சையில் முதலாமிடத்தை பெற்று தேசிய மட்ட விருதை பெற்ற சுன்னாகம் கிழக்கு சொர்ணவரத காளியம்பாள் அறநெறி பாடசாலை மாணவிகளான ம.குணாளினி, ம.சஜிந்தினி, த.தர்மினி ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக் கௌரவிப்புவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அறநெறிப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

தலைவர் செ.சிவநடராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் கலந்து கொள்வார். (அ)




# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம் நாள் நிகழ்வில் சக்திவழிபாடு எனும் தலைப்பில் இளம் சொற்பொழிவாளர் நி.பகிதரன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் வில்லிசைப்போட்டிகளும் புத்தூர் கன்னியர் ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-9)

********

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் சைவ வித்தியா விருத்திச்சங்க அறநெறிப்பாடசாலையினரும் இணைந்து நடத்தும் நவராத்திரிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச்சங்கத்தில் இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராஜசர்மா ஆனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். அன்றைய தினம் மாணவர்களது நடனம், பஜனை, நாடகம் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரத்தியேக ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பிரத்தியேகமாக நடைபெறவுள்ள ஆங்கில வகுப்புக்கள் பிரிவு 2 இற்கு பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வகுப்புக்கள் நான்கு கிழமைகள் (120 மணித்தியாலயம்) கொண்டதாக அமையவுள்ளது. அத்துடன் கிழமை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை வகுப்புக்கள் நடைபெறும்.

பதிவுகள் அனைத்தும் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலதிக தகவல்கள் பெற விரும்புவோர் 021 222 4580, 021 222 1395 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது **Steps Institute** யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் வகுப்புக்கள் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்துவதற்காகவே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சுகமளிக்கும் ஆராதனை

(கோண்டாவில்)

இன்னிசை நற்செய்தி கூட்டமும் சுகமளிக்கும் ஆராதனையும் இன்று வெள்ளிக்கிழமை யா/றோ.க.த.க.பாடசாலையில் பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேவஊழியர் சி.லகுணன் தலைமையில் நடைபெறும் இவ் ஆராதனையில் நல்ல சமாரியன் தேவாலய அருட்சகோதரர் அன்ரனி குயின் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (அ)

# ஸ்கந்தாவிற்கு புதிய அதிபர்

(யாழ்ப்பாணம்)



சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் புதிய அதிபராக இராமநாதன் ஈஸ்வரதாசன் கடமையேற்றுள்ளார்.

இவர் விஞ்ஞானமாணி பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி, முதுதத்துவமாணி ஆகிய பட்டங்களை பெற்றுள்ளார். தற்போது அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கல்வியியற்றுறையில் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார்.

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியராகவும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய இவர் ஸ்கந்தவரோதய கல்லூரியின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-8)

# ESOFT

*The Leader in Professional ICT Education*

# METRO CAMPUS

## JAFFNA


இலங்கையின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப வலையமைப்பான **ESOFT**

**19th October** முதல் நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் யாழ்நகரில்.........

**edexcel HND**

**In Computing & Business**

பதிவுகளுக்கான இலவச



நிபந்தனைகளுக்குட்பட்டது

(சி/1337)

# 021 222 4142

**No. 137, K.K.S. Road, Jaffna (HSBC வங்கி மேல் மாடியில்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை பிரபாகரன் கூட விரும்பவில்லை

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூட 13 ஆவது திருத்தச் சட்டத்தை விரும்பவில்லை. எனவே, மாகாண சபை முறைமையை கைவிட்டு புதிய மாவட்ட மற்றும் பிரதேசங்களை மையப்படுத்திய மக்கள் சபைகளை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக 13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டியது ஜனாதிபதியின் தார்மீக கடமையாகும் என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

வடமாகாணசபை தேர்தலை நடத்தி அங்கு மாகாணசபை அமைக்கப்பட்டால் மத்தியரசு பாரிய நெருக்கடிகளை சந்திக்க நேரும். மாகாண சபைகள் பாராளுமன்றத்தை குழப்பியடிக்கும் நிலையங்களாகவே மாறியுள்ளன. அது மட்டுமன்றி இந்தியா உள்ளிட்ட மேற்குலக சக்திகள் பலவும் மாகாண சபைகளின் ஊடாகவே மத்தியரசிற்கு நெருக்கடிகளை கொடுக்க முயற்சிக்கின்றன என்று அம்முன்னணி குறிப்பிட்டுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு கட்சியின் பேச்சாளர் பியசிறி விஜயநாயக்க கருத்து தெரிவிக்கையில்,

இந்தியாவினால் 1987 ஆம் அண்டில் இலங்கை யாப்பிற்குள் பலவந்தமாக திணிக்கப்பட்ட விடயமே மாகாணசபை முறைமையாகும். பயங்கரவாத யுத்தம் முடிவடைந்தவுடனேயே இலங்கையில் அரசியலமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தத்தை அப்புறப்படுத்தி இருக்க வேண்டும்.

இதனை பலமுறை நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். ஆனால், தற்போது அதற்கான நேரம், காலம் கூடி வந்துள்ளது. இனி மாகாணசபை முறைமையை இல்லாதொழித்து புதிய தேசிய முறைமைகளை அமுல்படுத்த அரசு முயற்சிக்க வேண்டும்.

வடமாகாண சபை அமைக்கப்பட்டு அதன் ஆட்சி தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரிடம் சென்றால் நிலைமை மிகவும் மோசமாகி விடும். எனவே, நாட்டை மேலும் பிரிவினைவாத சூழலுக்குள் வைத்துக் கொள்வது என்பது ஆபத்தான நிலையாகும்.

இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட மேற்குலக சக்திகள் மாகாணசபை முறைமையை தொடர்ந்தும் கையாண்டு நாட்டில் பிளவுகளை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இது இலங்கையின் எதிர்காலத்தை பாதித்து விடும். எனவே, மக்கள் ஆணையை மதித்து பாராளுமன்றத்தில் காணப்படும் மூன்றில் இரண்டு அதிகாரத்தை பயன்படுத்தி 13 ஆவது திருத்தத்தை அரசு இல்லாதொழிக்க வேண்டும் என்றார். (அ-2)


Cambridge Management College

OPEN DAY-20,21 October -2012

நேரம்- 9.00 முதல் 3.00 மணி வரை

யாழில் முதன் முறையாக UK இல் இருந்து வருகை தந்துள்ள ஆங்கிலேயர்களால் ஆங்கிலம் New Method இல் கற்பிக்கப்படுகின்றது.

Lecturers



Mr. Rob Horne
M.Phil in English
Qualified
Cambridge
Uni Examiner



Ms. Janette Smith
Master of
Education
(English)

தொழில் புரிவோர் (ஆசிரியர்கள், சட்டத்தரணிமார்கள், வர்த்தகர்கள்) பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள், வெளிநாடு செல்ல விரும்புவோர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


# வடக்கில் இராணுவத்தளம் அமைப்பு குறித்து கவலை

## சீனாவிடம் கூட்டமைப்பு தெரிவித்தது

(கொழும்பு)

வடக்கில் இராணுவம் நிரந்தர தளங்களை அமைப்பதற்கு சீனா உதவிகளை வழங்கி வருவது குறித்து கொழும்பிலுள்ள சீன தூதரக அதிகாரிகளிடம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள சீனத் தூதரக அதிகாரிகளை சந்தித்து வடக்கில் இராணுவத்துக்கு சீனா உதவுவது குறித்து தமது கட்சி கவலை வெளியிட்டதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினால் அமைக்கப்படும் நிரந்தர படைக்கட்டுமானங்கள் தமிழர்களுக்கு சொந்தமான நிலங்களிலேயே அமைக்கப்படுகின்றன என்று சீனத் தூதரக அதிகாரிகளிடம் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்குமான பாரிய குடியிருப்புக் கட்டமைப்புக்களை வடக்கில் அமைப்பதற்கு சீனா உதவிகளை வழங்கி வருகிறது.

இது தொடர்பான தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டை சீனத் தரப்புக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தேவைகளையும் கூட சீனா கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# செயற்கைக்கோள் தயாரிப்பு

(கொழும்பு)

சீனாவும் இலங்கையும் இணைந்து தயாரித்துள்ள செயற்கைக்கோள் எதிர்வரும் 22ஆம் திகதி நவம்பரில் விண்ணில் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் சுப்ரீம் செட் என்ற தனியார் நிறுவனம் இந்த செயற்கைக்கோளை தயாரித்துள்ளது.

இதனை விண்ணில் செலுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக இந்த நிறுவனத்தின் தலைவர் எஸ்.மணிவானன் தெரிவித்துள்ளார். (அ-2)

## சிங்கள மீனவர் மீது தாக்கிவிட்டு

# தப்பியோடிய மர்மப்படகை கண்டுபிடிக்க நடவடிக்கை

தங்காலை தெவிநுவர பிரதேச சிங்கள மீனவர்கள் மீது ஆழ்கடலில் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிய படகையும் அதிலுள்ளவர்களையும் பிடிக்க சர்வதேச நாடுகளின் கரையோர பாதுகாப்பு பிரிவுகளுக்கு அறிவித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இவர்கள் எந்த நாட்டுக்குச் சென்றுள்ளார்கள் என இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறிய அவர் தாக்குதலுக்கு வந்த படகில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் இருந்ததாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்படி சம்பவம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இக்கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

படகு உரிமையாளருடன் கடந்த 14 ஆம் திகதி இரவு 5 பேர் றோலர் படகில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இதன்போது பெண்கள், சிறுவர்கள் அடங்கிய குழுவொன்று வந்த மற்றொரு படகு இவர்களை கடத்திச் சென்றுள்ளது. ஐவர் மீதும் தாக்குதல் நடத்தி கட்டிவைக்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடிக்கச் சென்ற படகில் இருந்த உரிமையாளருக்கும் மற்றப் படகில் உள்ளவர்களுக்குமிடையில் தொடர்பு இருந்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

ஐவரில் 2 பேர் கடலில் குதித்து தப்பியுள்ளனர். அடுத்த மூன்று மீனவர்களுக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இந்தச் சம்பவம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதன்றி தற்செயலாகவே இடம்பெற்றுள்ளது. வேறு நாடொன்றுக்கு செல்லவே மீன்பிடிக்கச் சென்ற றோலர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடையவர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். விரைவில் இதன் பின்னணியில் உள்ள உண்மைகள் வெளியாகும் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)


கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மிருகசீரிடம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-31.5<br>தகைமை:-G.A.Q, கணனி<br>B/395 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவோணம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா:-83<br>தகைமை: A/L, Computer<br>G/354 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கேட்டை 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-13.75<br>தகைமை:- முகாமைத்துவ உதவியாளர்<br>B/260 | பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சதயம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா:-35.25<br>தகைமை:-B.A<br>G/127 |
| பிறப்பு:- 1980 இந்து<br>நட்சத்திரம்:-உத்தரம் 4<br>உயரம்:-5'7"<br>கி.பா:-61<br>தகைமை:-BA, (MA Exam எடுத்துள்ளார்)<br>B/223 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சதயம் 1<br>உயரம்: 5'2"<br>கி.பா:- 10.75<br>தகைமை:- A/L, (AAT)<br>G/129 |
| பிறப்பு:- 1981 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்:-ரோகினி 3<br>உயரம்:-6'<br>கி.பா:-53.5<br>தகைமை:- O/L, வியாபாரம்<br>B/220 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா: 36<br>தொழில்:- Computer Diploma<br>G/259 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்

## 17.10.2012 - 16.11.2012



## துலாம்

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**சிக்கல்கள் விலக தெய்வ தரிசனம் தேவை!**

**தவளாத மனதிற்கு சொந்தக்காரர்களாக விளங்கும் துலா இராசி நேயர்களே!**

உங்கள் பேச்சில் ஒரு கவர்ச்சி இருக்கும். ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்னால் ஒருமுறைக்குப் பலமுறை யோசிப்பீர்கள். உலக இன்பங்கள் அனைத்தையும் ஒருங்கே அனுபவிக்க வேண்டுமென்று சொல்வீர்கள். உங்களைச் சுற்றி நண்பர்கள் வட்டம் இருந்து கொண்டே இருக்கும். எதிர்காலச் சிந்தனையிலேயே எப்பொழுதும் மூழ்கியிருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்ம இராசியில் நான்கு கிரகங்கள் கூட்டாக இணைந்து சஞ்சரித்து மாதம் தொடங்குகிறது. தொழில் ஸ்தானம், இலாப ஸ்தானம், விரய ஸ்தானம் ஆகிய மூன்றுக்கு அதிபதியும் ஜென்ம இராசியில் சஞ்சரிப்பதால் வரவும்- செலவும் சமமாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். உறவினர் பகை மாறினாலும் ஒருசில உறவுகள் மீண்டும் பகையாகிவிடலாம்.

உச்சசனி உங்களுக்கு நன்மையைச் செய்தாலும், சூரியனோடு அது இணைந்து சஞ்சரிப்பதால் அடிக்கடி உடல்நிலை தொல்லைகளைக் கொடுக்கலாம். நோய்க்கான அறிகுறி தோன்றும் பொழுது, மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. சனீஸ்வர சிலருக்கு உருவாகலாம். ஒருகாலத்தில் ஓகோ என்றிருக்கும் சூழ்நிலை உண்டு. இராகு- கேதுகளுக்கு முறையான பரிகாரம் செய்து யோக பலம் பெற்ற நாளில், ஸ்தல வழிபாடுகளையும் மேற்கொண்டால் தடைகள் அகலும். தக்கவிதத்தில் மற்றவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வாகன மாற்றம் செய்வதன் மூலமும், இடமாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமும் துயரங்களில் இருந்து விடுபட முடியும்.

**வரவு திருப்தி தரும் நேரம்!**

ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்கிரன் நீச்சம் பெறப் போகிறார். இதன் விளைவாக திட்டமிடாது செய்யும் காரியங்களில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். அஷ்டமாதிபதி சுக்கிரன் நீச்சம் பெறும்பொழுது, விபரீத இராஜ

தனுசு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வாழ்க்கைத்துணை வழியே வருமானம் வந்து சேரும். உத்தியோக மாற்றம், அந்நிய தேசத்தொடர்புகள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்கிச் சேமிக்க முற்படுவீர்கள்.

**இம்மாதம் நவக்கிரக வழிபாடு நன்மையை வழங்கும்.**

இம்மாதம் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ளலாம். குடும்பச்சுமை கூடும். வேலைப்பளு அதிகரிக்கும். கொள்கைப் பிடிப்புடன் செயற்பட இயலுமா என்பது சந்தேகம்தான். கொடுக்கல்- வாங்கல்களில் விழிப்புணர்ச்சியோடு இருந்

## விபரீத ராஜயோகம் செயற்படப் போகிறது அல்லவா? எனவே, வருமானம் திருப்தியளிக்க வழிபிறக்கும்

வழிபாடும் ஆஞ்சநேயர் வழிபாடும் சஞ்சலங்களைத் தீர்க்கும். பணிகளில் தொய்வு ஏற்படாமல் இருக்க பக்கத்தில் இருப்பவர்களிடம் அனுசரித்து செல்வதே நல்லது.

முழுமையான சர்ப்ப தோஷத்தில் உங்கள் இராசி அமைந்திருப்பதால் ஏற்ற இறக்கமான சூழ்நிலைகூட ஒரு யோகமாக செயற்படும் அல்லவா? எனவே, வருமானம் பெருக வழிபிறக்கும். அதேநேரத்தில் வந்த மறுநிமிடமே பணமும் செலவாகிவிடும். விரயங்களை நல்ல விரயமாக மாற்றிக் கொள்வது நல்லது.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**

எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் தால் ஏமாற்றத்தைத் தவிர்க்கலாம். கணவன்- மனைவிக்குள் விட்டுக்கொடுத்து செல்வதன் மூலமே வியக்கும் வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும். மாதத்தின் மையப் பகுதியில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடி வரும். சர்ப்பசாந்தி செய்து கொள்வதால் சந்தோஷங்கள் கூடும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும்!**

**தெய்வ வழிபாட்டின் மூலம் திருப்தியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் விருச்சிக இராசி நேயர்களே!**

சிரித்த முகமும், சிந்திக்கும் ஆற்றலும்தான் உங்கள் பெரிய வெற்றிக்குக் காரணம். அற்புதமான யோசனைகள் சொல்வதன் மூலம் மற்றவர் மனதில் இடம்பிடிப்பீர்கள். இரக்க குணத்திற்கு நீங்கள் சொந்தக்காரர்கள் என்பதை இயல்பாகப் பேசும் போது புரிந்து கொள்வார்கள். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள்.

உங்களுக்கு இந்த ஒக்டோபர் மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் உங்களுக்கு வந்து சேரும். சகாய ஸ்தானம் மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியான சனிபகவான் இலாப ஸ்தானாதிபதியுடன் இணைந்து, விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அதேநேரத்தில் தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் அதோடு இருக்கிறார். இந்த கூட்டுக் கிரக யோகத்தின் பலனால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொழிலில் இடமாற்றம், வீட்டில் இடமாற்றம் மற்றும் பணியாளர் மாற்றம் போன்றவற்றைச் செய்ய முன்வருவீர்கள். ஒரு சிலருக்கு புதிய வீடு கட்டிக் குடியேறும் வாய்ப்பும் உருவாகும்.

குருவின் பார்வை முழுமையாக உங்கள் இராசியில் பதிவதால் கடை திறப்பு விழாக்கள்முதல் கல்யாணக் கனவுகள் வரை நடைபெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும். விரயச் சனிக்குப்

ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். 12க்கு அதிபதி நீச்சம் பெறும்பொழுது விரயங்கள் குறையலாம். இக்காலத்தில் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள் அந்நியதேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்துசேரும். இலாபம் குவியும் இந்த நேரத்தில் பிற இனத்தாரின் ஒத்துழைப்போடும், பிரபல்யங்களின் ஒத்துழைப்போடும் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**சொத்து சேர்க்கைக்கு அஸ்திவாரமிடும் நேரம்!**

எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி இராசிநாதன் செவ்வாய் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக மேலும் நற்பலன்களை சந்திக்கப் போகிறீர்கள். உடன்பிறப்

## கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள் குடும்பத்தில் சந்தோஷங்கள் அதிகரிக்கும்

செவ்வாய் உங்கள் இராசியிலேயே பலம் பெறுகிறார். அதை தனாதிபதி குரு பார்க்கிறார். அப்புறம் என்ன உங்கள் காட்டில் பண மழைதான் பொழியப் போகிறது. தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.

ஏழரைச்சனியின் ஆதிக்கம் இருந்தாலும், எண்ணற்ற நற்பலன்களே பரிகாரமாக சனிக்கிழமை காலையில் அனுமன் வழிபாட்டையும் மாலையில் சனிபகவான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். வழிபாடு செய்வதன் மூலமே திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிக்க இயலும்.

**எண்ணியதை நிறைவேற்றும் கன்னிச் சுக்கிரன்!**

புக்களின் ஒத்துழைப்பும், உற்சாகத்தோடு பணிபுரியும் வாய்ப்பும் கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள். புதிய வாகனங்களும், புதிய சொத்துக்களும் வாங்க போட்ட திட்டம் நிறைவேறும். பழைய பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும்.

இம்மாதம் கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகிய முப்பெரும்



## விருச்சிகம்

தேவியரை வழிபட்டு முன்னேற்றங்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

இம்மாதம் இனிய மாதமாகவே உங்களுக்கு அமைகிறது. வசதி வாய்ப்புகள் பெருகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல்- வாங்கல்களில் இதுவரை வசூலாகாத பாக்கிகள் வசூலாகும். கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். பிள்ளைகளின் நலன்கருதி எடுத்த முயற்சிகள் மாதத்தின் மையப் பகுதியில் நடைபெறும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பொதுநல ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். பௌர்ணமியன்று மலைவலம் வருவது மகத்துவம் வழங்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யா/நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# ஐரோப்பிய நாடுகளை போன்று அதிநவீன போக்குவரத்து வசதி

## திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்கிறார் போக்குவரத்து அமைச்சர்

(கொழும்பு)

சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகளைப் போன்று அதி நவீன வீதி போக்குவரத்து நடைமுறையை கொழும்பிலும் அதன் அயல் நகரங்களிலும் முன்னெடுக்க இலங்கையின் போக்குவரத்து அமைச்சு பாரிய திட்டங்களை வகுத்துள்ளது. யுத்தம் முடிவுற்ற பின்னர் கொழும்பு வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனால் இத்திட்டம் அதிக முக்கியத்துவம் பெறுவதுடன் வாகன நெரிசல், விபத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக அமையுமெனவும் போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பிலான சாத்தியவள கற்கையினை அமைச்சு ஜெய்க்கா நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றது.

அதிநவீன போக்குவரத்து திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மற்றும் பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் கொழும்பு சினமன் கிரேன்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய செயற்றிட்ட குழுத் தலைவர் வாச்சி டொமகாசு, திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஏதுவாக வீடுகளில் கருத்துக் கணிப்புக்கள் நடத்த தீர்மானித்திருப்பதனால் பொதுமக்கள் இதற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

இத்திட்டத்திற்கான முழுமையான செலவீனம் இன்னமும் மதிப்பிடப்படவில்லையென சுட்டிக்காட்டிய அமைச்சின் செயலாளர் கெ. தம்மிக்க பெரேரா எதிர்வரும் 21 மாதங்களுக்குள் இத்திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

கொழும்பிலும் அதன் அயல் நகரங்களிலும் அதிநவீன வீதி போக்குவரத்து முறையை ஏற்படுத்த ஜப்பானிய அரசாங்கத்தின் ஜெய்க்கா நிறுவனம் நிதி உதவி மற்றும் முழுமையான ஒத்துழைப்பினை அரசாங்கத்திற்கு வழங்கி வருகிறது.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரியில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. வாகன நெரிசல் ,வாகன தரிப்பிடத்திற்கு போதிய இடவசதியின்மை, பாதசாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினை, வீதி விபத்துக்கள், சூழல் மாசடைதல், பேருந்து போக்குவரத்திலுள்ள குறைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு விமோசனமாக அமையும் வகையிலேயே இத்திட்டத்தின் சாத்தியவள கற்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அதிக கடன் சுமைக்குள் வடக்கு கிழக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்

## உலக உணவுத் திட்டம் தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள விவசாயிகள் அதிக கடன் சுமையை சுமக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

வறட்சி காரணமாக இந்த முறை விவசாய உற்பத்திகளின் அறுவடை 20 தொடக்கம் 30 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த விவசாயிகள் தமது வருமான இழப்பை சந்தித்துள்ளனர் என்று உலக உணவு திட்டம் தமது அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் அவர்கள் சுத்தமான குடிநீர், சுகாதாரமான வாழ்க்கைச்சூழல் போன்றவற்றை பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.வருமான இழப்பினால் கடன் நீடிப்பு , தங்க நகை அடகு வைத்தல் போன்றவை அதிகரிப்பதாகவும் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இந்த நிலை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு சிறந்த உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்று அவசியப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கையில் பாரிய ஊழல்; வறிய நிலை ஏற்படும் நிலை

## ஊழலுக்கு எதிரான அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறுகின்ற பாரிய அளவிலான ஊழல்கள் பொருளாதார வளர்ச்சியை பின்னடைய செய்வதாக ஊழல் ஒழிப்பு மற்றும் ஊழலுக்கு எதிரான அமைப்பின் தலைவர் நிஹால் சிறி அமரசேகர தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் இடம்பெற்ற ஊழல் ஒழிப்பு தொடர்பிலான சர்வதேச மாநாடு ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உயர்மட்ட தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற அதிகளவிலான ஊழல் மோசடிகளால் இலங்கையின் வறிய நிலை ஏற்படுவதுடன் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை முறையாக செயற்படுத்த முடியாமல் போவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது பொருளாதாரத்தை மாத்திரம் பாதிக்காமல் நாட்டின் அபிவிருத்தி உட்கட்டுமான பணிகளில் தாக்கம் செலுத்துவதாக அவர் குறிப்பிட் டுள்ளார். (அ-2)

# சீபா உடன்படிக்கையில் இலங்கைக்கு அதிக நன்மை

## இந்தியாவும் இலங்கையும் பேச்சு நடத்தும்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலம் இலங்கைக்கே அதிக நன்மை கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய வர்த்தக ஆய்வு ஒன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதி ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாக காணப்படுகிறது.

எனினும் இந்தியாவிலிருந்து பொருட்கள் சேவைகள் இலகுவாக கிடைக்கப் பெறுகின்றமை மற்றும் இந்திய முதலீட்டாளர்களின் வருகை என்பன இலங்கைக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த நன்மைகள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீபா உடன்படிக்கையும் [illegible] நிலைமையையே ஏற்படுத்தும் என்ற கோணத்தில் அதனை அமுலாக்குவது தொடர்பில் விரைவில் இந்தியாவும் இலங்கையும் பேச்சுவார்த்தை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் சீபா உடன்படிக்கைக்கு உள்நாட்டில் பாரிய எதிர்ப்புகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கடன்பெறாத முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு அமைச்சர் கஜதீர சந்திப்பார்

(நேற்றைய தொடர்ச்சி..:)

வி.தருமராஜ் (மன்னாங்கண்டல்),என். ஜெயராசா (மன்னாங்கண்டல்),எஸ்.சமலன் (வள்ளிபுனம்),எம்.மகேஸ்வரி (றெட்பானா), கே. உசாந்தினி ரவிச்சந்திரன் (விசுவமடு), ஏ.மாரிமுத்து பரமேஸ்வரன் (விசுவமடு), எஸ்.சிவலிங்கம் (மாங்குளம்),எம்.தேவநாயகி (மாங்குளம்),ஈ.செல்வரூபன் (ஒட்டுசுட்டான்), பி. ஜீவராஜ் (ஒட்டுசுட்டான்),எம்.மதுரன் (ஒட்டுசுட்டான்),கே.முகுந்தன் (ஒட்டுசுட்டான்), ஏ.ஏ. அந்திலக்சனா ( மணற்குடியிருப்பு),பி. பிரதீபன் (முள்ளிவாய்க்கால் கிழக்கு), என்.சின்னராசா கபிலன் (முள்ளியவளை), எம். பகீரதன் (முள்ளியவளை), எஸ்.ஜனோசரியாஸ் (முள்ளியவளை), எஸ்.ஜெகதீஸ்வரன் (அளம்பில்),பி.யூயின் தனுசியா (அளம்பில்), ஜெ. யருட்சன் (செல்வபுரம்),கே.றீகன் (அளம்பில்), எஸ்.பேபிசாளினி (முள்ளிவாய்க்கால்), எம். திவாகரன் (செல்வா புரம்),டி. ஜெகதீஸ் வரன் (முள்ளியவளை), எஸ்.திருக்குமரன் (முள்ளியவளை),கே.ஜெகதீஸ்வரன் (கள்ளப்பாடு வடக்கு),எஸ்.உலகநாதன் விணோகரன் (குமுழமுனை),வி.அனுசுமி (முள்ளியவளை), எஸ். பிரசன்னா (முள்ளியவளை), கே.றெஜினோல்ட் (முள்ளியவளை), கே.புவகேந்திரன் சுதர்சன் (கள்ளப்பாடு தெற்கு),டபிள்யூ. துசாந்தினி ( கள்ளப்பாடு வடக்கு), வி.யூட் டினேஸ்குமார் (செல்வபுரம்),எஸ்.அழகன் (கள்ளப்பாடு வடக்கு),எம்.றொபின்சன் (வண்ணாங்குளம்), பி.சிந்துஜன் (முள்ளியவளை) (முற்றும்)


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 28 08 1938



உதிர்வு 15 10 2012

கிளி/மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலை அதிபர் சேனாதிராஜா கோடீஸ்வரன் அவர்களின் அன்புத்தந்தையாரான

## அமரர் முத்துக்குமாரு சேனாதிராசா

(வேலணையைப் பிறப்பிடமாகவும் வேரவில் பூநகரியை வசிப்பிடமாகவும் விநாயகபுரம் கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்டவர்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம்.

(சு/1335)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

75

நிசங்கமல்லன்

கலிங்கத்து மகானின் படை அரண்கள் இலங்கையின் பல பாகங்களிலும் அமைந்திருந்தன. இலங்கை மீது மகானின் படை



இராவணன்வெட்டு

யெடுப்பு வரலாற்றில் மிக முக்கிய மான நிகழ்ச்சியாக அமைந்தது. தென்னிந்தியாவிலிருந்து 24 ஆயிரம் தமிழ்க் கேரளப் படை வீரர்களுடன் வந்து சிங்கள மன்னனை வெற்றி கொண்டு பொலநறுவையைக் கைப்பற்றிக்கொண்டு அங்கு தங்கி னான். பொலநறுவை யுகத்தின் பிற்காலத்திலேற்பட்ட அரசியல் குழப்பங்கள் மகானின் வெற்றிக்குச் சாதகமாக அமைந்தன. இவன் தென்னிந்தியாவிலிருந்து படை யெடுத்து வந்தானா அல்லது உத்திர தேசத்தின் ஒரு பகுதியிலிருந்து படையெடுத்து வந்தானா என்பது ஆய்வுக்குரியது. இவனுடைய படை வீரர்களும் இவனுக்கு உதவியாக வந்த ஜயபாகுவின் படை வீரர் களும் தங்குவதற்கு அரசன் அமைத் திருந்த பாசறைகளாக ஊர்காவற் றுறையும் வலிகாமமும் அமைந்தி ருந்ததெனச் சூளவம்சம் கூறுகிறது.

அதனைப் பூஜாவலிய என்ற சிங்கள நூலும் உறுதிப்படுத்துவதாக இந்திரபாலா குறிப்பிடுகிறார்.

இடங்களில் அமைந்திருந்தன என் கிறது பூஜாவலிய.

இராஜரட்டை முழுவதும் மாக னின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. கொட்டியாரம், கோணாரட்டை (திருகோணமலை), கந்தளாய், கட்டுக் குளம், பதவியா முதலான பகுதிகளும் அவன் ஆதிக்கத் தில் இருந்தன என் கிறது சூளவம்சம்.

மாயரட்டையும் பின்னால் உருகு ணையும் மாகனின் ஆட்சிக்குட்பட்டி ருந்தது என அறி யப்படுகின்றது. தமி ழர் பிரதேசங்களை சிங்கள ஆதிக்கத் திலிருந்து மீட்டு இராசரட்டை எனப்படும் வடபகுதி யில் குடியேறியிருந்த சிங்கள ஆக்கிர மிப்பாளர்களை தென்புலம் பெயர வைத்தவன் கலிங்கத்து மாகன்

யாளனாக வந்த ஜயபாகு என்றறியப் படும் சோழகங்கன் அல்லது குளக் கோட்டன் மகானுடன் இணைந்து ஆலயத்திருப்பணிகள், வன்னிமை வகுத்தல், விவசாய விருத்தி, நீர்ப் பாசனம் முதலிய பணிகளை ஆற்றி னார்கள் என்பதற்குப் பல ஆதாரங் கள் உள்ளன.

இவனை ஒரு தமிழ் மன்னனாகக் கூறும் மட்டக்களப்பு மானியம் இந்து மதத்துக்கு ஆற்றிய பணிகளைச் சிறப்பாக கூறும். மாகன் தவறான மதக்கொள்கைகளை பின்பற்றியவன் எனக் கூறும் சூளவம்சம் இவன் விகாரைகள், வழிபாட்டிடங்கள் முதலி யவற்றைத் தன் படை வீரர்களுக்கும் தமிழ் பிரதானிகளுக்கும் பகிர்ந்து வழங்கினான்.

மகான் இலங்கையைக் கைப்பற்றி யதும் சிங்களச் சேனாதிபதி மாணா பரணன் கலிங்கமகானை அழைத்து ஆட்சியை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். புலத்திநகரில் முடிசூடி வாழத்தலைப்பட்டதும், தான் பின்பற் றும் தவறான மார்க்கத்தை (சைவம்) பின்பற்றுமாறு மக்களைப் பணித்




கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

பொலநறுவையைக் கைவிட்டு தென்னிலங்கை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

புதிய சிங்கள ஆட்சியின் தலை நகராகத் தம்பதேனியா உருவாகி யது. சிங்கள மக்கள் பாதுகாப்புக் கருதித் தெற்குநோக்கித் தமது இராச தானிகளைக் காலத்துக்குக் காலம் அமைத்தபோது, வடக்கே பலமான தமிழ் இராச்சியம் உரு வாக்கியது.


கலிங்கமாகனின் ஆட்சியில் சிங்கள மக்களுக்கும் பௌத்தத் துக்கும் எதிராக நிகழ்ந்த சம்பவங் களின் எதிரொலி இராசரட்டைப் பிரதேசத்தில் மட்டுமன்றி, நாக தீபத்திலும் (யாழ்ப்பாணக் குடா நாடு) எதிரொலித்துள்ளதென ஊகிக்கலாம்.

வலிகாமம், வல்லிபுரம் ஆகிய பகுதிகளில் பரவி வாழ்ந்த சிங்கள பௌத்தர்கள் தமது பாதுகாப்புக் கருதி அவ்விடங்களைவிட்டு இடம் பெயர நேர்ந்தது. அதனால்தான்



திருக்கோணேஸ்வரம்

# கலிங்கத்து மாகன்



இராவணன் தேர்ப்பாறைகள்


கலிங்கத்து மகானின் அரண்கள் இலங்கையின் பல பாகங்களில் அமைந்திருந்தன. வடவிலங்கையில் ஊராத்தோட்டை, வலிகாமம், தெமிளபட்டினம் (யாழ்ப்பாணம்), குருண்டி (குருந்தன்களம்), மானா மத்த (மாந்தை), மன்னார, புளச்சேரி (பூநகரி), இலுப்பைக் கடவை ஆகிய

ஆவான். பொலநறு வையைப் பாழாக்கி அங்கிருந்த புத்த பள்ளிகளை இடி த்து, புத்தபிக்கு களை அங்கிருந்து துரத்தி, வேறு அனேக கொடுந் தொழில் களைச் செய்து, பழிபாவத்துக்கு அஞ் சாதவனாய் பொல நறுவையில் அர சாண்டிருந்தானெனச் சிங்கள நூல்கள் குறிப்பிடுமென இராசநாயகம் குறித் துள்ளார்.

இவனை ஒரு வீர சைவனாகக் குறி ப்பிடும் வரலாற்றாசிரியர்கள் மட்டக் களப்பில் அம்மதம் வளர்ச்சியடைய இவன் ஆட்சிக்காலமே காரணம் என்பர். [illegible]

தான். தமிழர்களுக்கு (கேரளர்களுக்கு) வயல்கள், மேய்ச்சல் தரவைகள், வீடுகள், தோட்டங்கள், மாடுகள், எருமைகள் எனச் சிங்களவருக்குச் சொந்தமானவற்றை உடமைகளாக் கினான். விகாரைகளுக்கும் சங்கத் துக்கும் ஒதுக்கப்பட்டிருந்த பரவணி நிலங்களையும் இவ்வாறு வழங் கினான். கலிங்க மாகனின் கொடுங் கோலாட்சி இலங்கையில் 21 வருடங் கள் நிலைத்திருந்தது எனச் சூளவம்சம் கூறும்.

கலிங்கமாகன் ஆட்சியில் சிங்கள மக்களும் பௌத்த மதமும் ஓரளவு பாதிப்புற்றன எனக் கருத இட முள்ளது. இவனுடைய ஆட்சி தமிழர் களுக்குச் சார்பாக இருந்ததால், இவன் மீது வெறுப்படைந்த சிங்கள மக் களில் சிலரும் தலைவர்களும் 250 [illegible] தலைநகராக விளங்கிய




தலைநகர்கள் தென் புலம் பெயர்தல்

யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய போது, அல்லது பூநகரிச் சிங்கை நகரிலிருந்து தமிழர் இராச்சியம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாறிய போது யாழ்ப்பாணத்துக்கு மக்கள் தேவைப்பட்டார்கள். அதனால் தென்னிந்தியாவிலிருந்து தருவித்துக் குடியேற்ற நேர்ந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## யாழ்.குடாநாட்டு கடற்பரப்பில் காணப்படும் சூடை மீன் இனங்கள், உற்பத்தி மற்றும் அவற்றின் முக்கியத்துவம்

இலங்கையானது நான்கு பக்கமும் கடல் வளத்தினால் சூழப்பட்டுள்ள ஒரு தீவாகும். பூமியில் 70.8% சமுத்திரங்களால் சூழப்பட்டுள்ளது. மீன்பிடித்துறையானது உணவு, தொழில் வாய்ப்பு என்பவற்றினை வழங்குவதுடன் வெளிநாட்டு வருமானத்தையும் ஈட்டித் தருவதால் (அந்நிய செலாவணியை) இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

யாழ்.குடாநாடானது இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ள ஒரு ஆழமற்ற நீர் பரப்பு (shallow water lpody) ஆகும். இப்பகுதியில் மீன்பிடியானது மிகவும் பிரதானமான பொருளாதார நடவடிக்கையாக காணப்படுகின்றது. பெரும்பாலான கரையோர வாழ் மக்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீன் உற்பத்தியானது கடந்த வருடம் ஏறத்தாழ 35 வீதத்தினால் அதிகரித்துள்ளது. ஆனாலும் 2011 ஆம் ஆண்டின் மொத்த மீன் உற்பத்தி 12 %, இவ் உற்பத்தியினளவு 1983 ஆம் ஆண்டின் 41 வீதத்துடன் ஒப்பிடுமிடத்து குறைந்த வீதமாகவே காணப்படுகின்றது.


மனித உடலுக்கு தேவையான போசணைப் பதார்த்தங்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதால் உலகில் உள்ள பெரும்பாலான மக்களால் விரும்பி உண்ணப்படும் உணவாக காணப்படுகின்றது.

### சூடை (Sardines)

சூடையானது Clupeidae குடும்பத்தினை சேர்ந்த மீன்களாகும். இம் மீன் வகைகள் ஒப்பீட்டளவில் உருவத்தில் சிறியனவாகவும் பெரியளவிலான கூட்டங்களாகவும் (large shoals) காணப்படுகின்றன. இம் மீன் இனங்கள் நுகர்வோரின் அதிகளவிலான கேள்வியுடையதாகவும் எமது நாட்டின் மீன்பிடியில் பிரதான பங்கினையும் வகிக்கின்றது.

### பரம்பல் (Distribution)

சூடை மீன்கள் பொதுவாக விரி கடலுக்குரியனவாக (marine pelagdc) காணப்படுகிறது. இம் மீன்களின் இள நிலைகள்/ இளம் பருவங்கள் (young) கடல் நீரேரிகள் (lagoons), கழிமுகங்களுக்குரியனவாக (estuaries) காணப்படுகின்றன. ஆனால், இவற்றின் முதிர் பருவங்கள் ஆழமான, கரையோர நீர் பரப்புக்களில் காணப்படுகின்றன.




யாழ்ப்பாண குடாநாட்டின் வருடாந்த மொத்த சூடை மீன் உற்பத்தி

யாழ்ப்பாணக்குடா கடற்பரப்பில் மீனவர்கள் பல்வேறு வகையான மீன்பிடி உபகரணங்கள், முறைகளை பயன்படுத்தி பல வகையான மீன் வகைகளை பிடிக்கின்றனர். இவற்றில் சூடை இன மீன்களும் மொத்த மீன் உற்பத்தியில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.


பொதுவாக மீனும் மீன் சார்ந்த உற்பத்திப் பொருட்களும் நிறைவான உணவின் முக்கிய கூறாக காணப்படுகின்றது. மீனானது மலிவான விலையில், இலகுவாக எல்லோராலும் பெற்றுக்கொள்ள கூடிய ஒரு இயற்கையான புரத மூலமாக மட்டுமன்றி,

### உற்பத்தி (Production)

இலங்கையில் வடபகுதி கரையோர கடல் நீரில் சூடை இன மீன்கள் உயர்திணிவளவில் அதிகளவில் காணப்படும் ஒரு மீன் வளமாக காணப்படுகின்றது.

இச் சூடை மீனினங்கள் உணவுச் சங்கிலியில் (food chain) தாழ்ந்த மட்டத்தில் (tropic level) காணப்படுவதால் சூழல் தொகுதியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இவை உணவுச் சங்கிலியில் முதலான உற்பத்தியாளர்களுக்கு ( primary producers) மேலாக காணப்படுவதுடன் தமது சக்தி தேவைக்காக அவற்றினை மேய்கின்றன.

சூடை மீன்கள் பொதுவாக சிறிய கண்ணளவுள்ள சூடை வலைகளை பயன்படுத்தி




யாழ்ப்பாண குடாநாட்டின் 2011 ஆம் ஆண்டிற்கான மாதாந்த மொத்த சூடை மீன் உற்பத்தி (Source: Department of Fisheries &. Aquatdc Resources, Jaffna, Production data ).

பிடிக்கப்படுகின்றன. இம்முறை மூலம் அதிகளவிலான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. ஆனாலும் மற்றைய மீன்களை பிடிக்க பயன்படுத்தப்படும் வலைகளினுள் தவறுதலாகவும் (Bycatch) குறைந்தளவிலும் பிடிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண குடாநாட்டை பொறுத்தவரை பருத்தித்துறை, தீவுப்பகுதி, மாதகல் பிரதேசங்களில் அதிகளவில் சூடை உற்பத்தி காணப்படுகின்றது. இம் மீனிணங்கள் அதிகளவில் கிடைக்கும் காலப்பகுதியில் உப்பிட்டு உலர்த்தல், புகையூட்டல் முறைகள் மூலம் பதப்படுத்தப்பட்டு கருவாடாக மாற்றப்படுகின்றன. இம் மீனினங்களின் உலர் மீன் உற்பத்திகள் அதிகளவு ஏற்றுமதி சந்தையை பெறுகின்றன.

யாழ்ப்பாண குடாநாட்டின் வருடாந்த மொத்த சூடை மீன் உற்பத்தியினை எடுத்து நோக்கின் சென்ற வருடங்களை விட தற்போது அதிகரித்து செல்வதனை உற்பத்தி தரவுகள் மூலம் அறிய முடிகின்றது.

ஆனாலும் சூடை மீன்களின் குடித்தொகையின் அளவானது ஒவ்வொரு மாதங்களுக்கு மட்டுமின்றி ஒவ்வொரு வருடமும் ஒரு சீரான நிலையில்லாமல் தளம்பல் நிலையில் காணப்படுகின்றது. இவற்றின் குடித்தொகை இருப்பில் காணப்படும் இவ்வாறான சமநிலையின்மையானது அவற்றின் சூழல்த் தொகுதியில் நேரடியான விளைவுகளை கொண்டிருக்கலாம். எனவே, இம் மீனினங்களின் குடித்தொகையைப் பேணுவதற்கு மீன்பிடி முகாமைத்துவம் மிகவும் அவசியமானதொன்றாகும். இம் மீன்களின் உயிரியலை சரியான முறையில் ஆராய்வதன் மூலமே தகுந்த முறையில் இம் மீனினங்களை முகாமைத்துவம் செய்யலாம்.

### யாழ்ப்பாண குடாநீரில் காணப்படுகின்ற சூடை மீன் இனங்கள்

இலங்கையில் இதுவரையில் 4 சாதிகளை (Genera) சேர்ந்த 11 இன (Species) சூடை மீன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாண கடற்பரப்பில் பின்வரும் சூடை மீன் இனங்கள் ஆய்வுகள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன, ***Sardinela gibbosa, S.longiceps, S.allpella, S.melaneura, S.fimlpriata and Amblygaster sirm.*** இம் மீன் இனங்களில் **S. gibbosa** ஆனது பிடிக்கப்படும் சூடை மீன்களின் விகிதாசாரத்தில் மற்றையவற்றுடன் ஒப்பிடும் பொழுது அதிகளவில் காணப்படுகின்றது.

செல்வி.பிரியதர்சினி தர்மகுலசிங்கம்,
உதவி விரிவுரையாளர், மீன்பிடியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இச் சூடை மீன்களை பொதுவாக நோக்கும் பொழுது ஒரே வகையாக தோற்றமளித்தாலும் உண்மையில் இவை வெவ்வேறான இனத்தினை சார்ந்தவையாகவே காணப்படுகின்றன. எனவே, இவற்றினை சரியான முறையில் அடையாளப்படுத்துதல் மிகவும் முக்கியமான விடயமாகும்.

பொதுவாக மீன்கள் அவற்றின் வெளித்தோற்ற உருவவியல் இயல்புகளில் காணப்படும் தனித்துவமான இயல்புகள் (secific characters)மற்றும் அளவறிமுறைத் தரவுகளை (Quantitative datas), எண்ணக் கூடிய இயல்புகள் (Meristic characters) மூலம் வேறுபடுத்தி அடையாளப்படுத்தப்படுகின்றன.

(தொடரும்...)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 73

**எட்டு எட்டுக்களை மட்டும் பயன்படுத்தி எண்கணித செயற்பாட்டின் மூலம் (கூட்டல்) 1000 (ஆயிரம்) எனும் எண்ணைப் பெறுவது எப்படி?**

விடைகளை 29.10.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 72 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

சாம்பவி இரமணன்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

**புதிர் 72 இற்கான கேள்வியும் விடையும்:**

**உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹாலின் பளிங்கு வடிவம் வனப்பிழந்து போகின்றமைக்குக் காரணமான வாயு எது?**

**விடை:-கந்தகவீரொட்சைட்டு ($SO_2$)**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 73

சரியான விடை:-..............................................................
முழுப்பெயர்:-..............................................................
முகவரி:-..............................................................
தொ.பே. இல:..............................................................
கையொப்பம்:..............................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளுக்கு போலி நாணயத்தாள்; திருமங்கலம் முகாமில் பரபரப்பு

(சென்னை)

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள உச்சப்பட்டியில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இங்கு ஆயிரத்து 35 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்களுக்கு மாதம் தோறும் அரச உதவி தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த மாதத்திற்கான உதவித் தொகையாக ஆண்களுக்கு ஆயிரம் ரூபாவும் பெண்களுக்கு 750 ரூபாவும் குழந்தைகளுக்கு 400 ரூபா்யையும் கணக்கிட்டு திருமங்கலம் வருவாய் துறை அதிகாரிகள் வழங்கினர்.

இந்த பணத்தை பெற்றுக்கொண்ட அகதி ஒருவர் கூத்தியார் குண்டு விலக்கில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு சென்றுள்ளார். அங்கு 500 ரூபாயை கொடுத்துசாப்பாடு வாங்கிய போது கடைக்காரர் அது போலி நாணயத்தாள் என கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அகதி, முகாமுக்கு திரும்பி இது பற்றி கூற அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அனைவரும் அரசு அதிகாரிகள் விநியோகித்த நாணயத்தாள் குறித்து விவாதிக்க தொடங்கினர். இது குறித்த தகவல் கிடைத்ததும் ஆஸ்டின்பட்டி பொலிஸார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

வருவாய்த்துறை அதிகாரிகள் நாணயத்தாள்களை வாங்கி பார்த்து விட்டு அது நல்லவை போலியல்ல என உறுதி அளித்தனர். இருப்பினும் முகாமில் இருந்தவர்களின் சந்தேகம் தீராததால் அதிகாரிகள் வேறு நாணயத்தாள்களை மாற்றி கொடுத்து சென்றனர். (அ-2)

# நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி சிவன்கோயில் சிவஸ்ரீ த.ஞானபண்டிதக்குருக்களின் 30 ஆவது ஆண்டு நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சித்தன்கேணி மஹாகணபதிப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் திருகோணமலை எச்.என்.பி.யின் முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சின்மயமிஷன் ஜாக்ரத் சைதன்ய சுவாமிகள் கலந்து கொள்ளவுள்ளார். சைவ பண்பாட்டு பேரணியுடன் சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்திலிருந்து விழா மண்டபத்திற்கு விருந்தினர்கள் அழைத்து வருதல், நடனம், கோலாட்டம், காவடி போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

அத்துடன் சிறுகதை நூல்வெளியீட்டு விழா, விருந்தினர் கௌரவிப்பு, சிறுவர் துஷ்பிரயோக கருத்தரங்கில் கலந்து கொண்ட அரச உத்தியோகத்தர் கௌரவிப்பு, நீண்ட கால திருமுறைத் தொண்டாற்றி வரும் சிவனடியார் கௌரவிப்பு என்பன நடை பெறவுள்ளன.

***ஞானரத்தின பைரவ கீதங்கள்***

இறுவெட்டு வெளியீட்டுரையினை மூத்த இசைக்கலைஞர் சு.கணபதிப்பிள்ளை ஆற்ற முதற்பிரதியினை ஓய்வுபெற்ற நீதிபதி சு.வசந்தசேனன் தம்பதியினரிடமிருந்து சங்கானை அரசடி வைரவர் தேவஸ்தான சிவஸ்ரீ வே.சண்முகராசக் குருக்கள் பெற்றுக் கொள்வார்.

இறுவெட்டு கலைஞரை வலம்புரிப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் கௌரவிக்கவுள்ளார். மேலும் இந்நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல், கானமழை இசை நிகழ்வு போன்றன நடைபெறவுள்ளன. (அ-9-17)

# இராணுவம் கொண்டுவந்த யானை வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம்

## முத்தையன்கட்டில் அவலம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் முத்தையன்கட்டு பகுதியில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்திருப்பதாகக் கிராமவாசிகள் கூறுகின்றனர்.

கடந்த ஒருமாத காலமாக இரவில் தாங்கள் நித்திரையில்லாமல் யானைகளின் தொல்லையினால் நிம்மதியற்றிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள் என்பவற்றை யானைகள் உடைத்துள்ளன. வீடுகளில் வைக்கப்பட்டிருந்த சுமார் 50 மூடைகள் வரையிலான நெல்லை இந்த யானைகள் சாப்பிட்டிருக்கின்றன. தென்னை, வாழை, மரவள்ளி பயிர்களையும் அவைகள் நாசம் செய்துள்ளன என்றும் கிராமவாசிகள் கூறுகிறார்கள்.

தென்பகுதியில் இருந்து இராணுவத்தின் உதவியோடு கொண்டு வரப்பட்டு முத்தையன்கட்டு பகுதியில் விடப்பட்டுள்ள யானை ஒன்று வீடுகளில் புகுந்து உப்பு மற்றும் சமைத்து வைத்துள்ள சோறு உட்பட உணவுகளைச் சாப்பிட்டு விட்டுச் செல்வதாகவும் ஊர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

திங்கட்கிழமை இரவு தென் பகுதியில் இருந்து ஒரு யானை கொண்டு வரப்பட்டதைக் கிராமவாசிகள் நேரில் கண்டுள்ளதாகவும் இது குறித்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் தாங்கள் கேட்டபோது அவ்வாறான யானை ஒன்று மேலிடத்தின் உத்தரவுக்கமைய திங்கட்கிழமை கொண்டு வரப்பட்டதை அவர்கள் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர். (எ-11)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.10 19

★1216-இங்கிலாந்தின் ஜோன் மன்னன் உயிரிழந்தபோது அவனது ஒன்பது வயது மகன் மூன்றாம் ஹென்றி ஆட்சிக்கு வந்தான்.

★1453-பிரெஞ்சு போர்டோ நகரைக் கைப்பற்றியதுடன் நூறாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.

★1469-அரகன் நாட்டு இளவரசன் இரண்டாம் பேர்டினண்டுக்கும் காஸ்டில் நாட்டின் இளவரசி இசபெல்லாவுக்கும் திருமணம் நடைபெற்றது. இந்நிகழ்வு பின்னர் 1516 இல் ஸ்பெயின் நாடு ஒருங்கிணைக்கப்பட வழிகோலியது.

★1655-சுவீடனின் காரெல் பத்தாம் குஸ்டாவ் மன்னன் போலந்தின் கிராக்கோவ் நகரைப் பிடித்தான்.

★1806-கெயிட்டியின் மன்னன் முதலாம் ஜாக் படுகொலை செய்யப்பட்டான்.

★1812-பிரான்சின் நெப்போலியன் பொனபார்ட் மொஸ்கோவில் இருந்து பின்வாங்கினான்.

★1813-ஜேர்மனியின் லைப்சிக் நகரில் நெப்போலியன் பொனபார்ட் பெரும் தோல்வியடைந்தான். ரைன் கூட்டமைப்பு முடிவுக்கு வந்தது.

★1912-லிபியாவின் டிரிபோலி நகரை இத்தாலியப் படைகள் ஒட்டோமான் பேரரசிடம் இருந்து கைப்பற்றினர்.

★1921-லிஸ்பன் நகரில் இடம்பெற்ற புரட்சியை அடுத்து போர்த்துக்கல் பிரதமர் அந்தோனியோ கிராஞ்சோ உட்பட பல அரசியல்வாதிகள் உயிரிழந்தனர்.

★1935-எதியோப்பியாவை இத்தாலி கைப்பற்றியதை அடுத்து நாடுகளின் கூட்டணி இத்தாலி மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.

★1943-காச நோய்க்கான Streptomycin என்ற நீநுண்ம எதிரி மருந்து றட்கஸ் பல்கலைக்கழகத்தில் பிரித்தெடுக்கப்பட்டது.

★1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கப்படைகள் பிலிப்பைன்சில் தரையிறங்கின.

★1950-சீன இராணுவம் திபெத்தின் காம்டோ நகரைக் கைப்பற்றினர்.

★1954-சோ ஒயு மலையின் உச்சி முதன் முறையாக எட்டப்பட்டது.

★1960-ஐக்கிய அமெரிக்க நாடுகள் கம்யூனிசக் கியூபா மீது பொருளாதார தடைகளை விதித்தது.

★1974-நியுயே நியூசிலாந்திடமிருந்து விடுதலைப் பெற்று சுயாட்சி மண்டலமாகியது.

★1976-சிம்பன்சி உலகின் அருகி வரும் மிருக இனமாக அறிவிக்கப்பட்டது.

★1983-கிரெனாடாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து அதன் பிரதமர் மோரிஸ் பிஷொப் படுகொலை செய்யப்பட்டார்.

★1986-மொசாம்பிக் ஜனாதிபதி சமோரா மேச்சல் உட்பட 33 பேர் விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டனர்.

★1991-வட இத்தாலியில் ஏற்பட்ட 7.0 ரிக்டர் அளவான நிலநடுக்கம் காரணமாக 2 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

★2000-பிபிசியின் யாழ்ப்பாண நிருபர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

★2001- 400 அகதிகளை ஏற்றிச் சென்ற இந்தோனேசியப் படகு கிறிஸ்துமஸ் தீவில் கவிழ்ந்ததில் 353 பேர் உயிரிழந்தனர்.

★2003-திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அன்னை தெரேசாவை முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.

★2005-மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்காக சதாம் உசேனுக்கு எதிரான வழக்குத் தொடங்கியது.

**பிறப்புக்கள்**

★1910-சுப்பிரமணியன் சந்திரசேகர், நோபல் விருது பெற்ற இந்தியப் இயற்பியலாளர் (இ.1995)

★1976-கோ. சன், தென் கொரிய விண்வெளி வீரர்

★1946- ரா.தாமரைக்கனி, தமிழக அரசியல்வாதி (இ.2005)

**இறப்புக்கள்**

★1937-எர்ணஸ்ட் ரதர்ஃவோர்டு, நியூசிலாந்து இயற்பியல் அறிஞர் (பி.1871)

★2006-ஸ்ரீவித்யா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1953)

### மயில்வாகனம் நிமலராஜன்

மயில்வாகனம் நிமலராஜன் யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு இயங்கிய முன்னணி ஊடகவியலாளர் ஆவார். இவர் இலங்கை இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ஆயுததாரி ஒருவரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

**ஊடகவியலாளராக வாழ்க்கை**

போர்ச் சூழல் நிலவிய யாழ்ப்பாணத்தில் இருந்து. நிமலராஜன் பல செய்தி நிறுவனங்களுக்கு செய்திகளை வழங்கி வந்தார். அவற்றுள் பிபிசியின் தமிழ், சிங்கள சேவைகளும் வீரகேசரி நாளேடு, ராவய நாளேடு என்பன முக்கியமானவையாகும். நிமலராஜன் யாழ்ப்பாணத்தில் இருந்து நடுநிலையான செய்திகளை வழங்கி வந்த வெகு சிலரில் ஒருவராவார்.

**தாக்குதல்**

அவர் வீட்டின் ஜன்னல் ஊடாக துப்பாக்கியால் சுடப்பட்டார். நிமலராஜன் தான் எழுதிக் கொண்டிருந்த கட்டுரை மேலேயே தனது உயிரை விட்டார். இத்தாக்குதல் யாழ்ப்பாண நகர மத்தியில் அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் நடைபெற்றது. இத்தாக்குதலில் நிமலராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம் (வயது 65), தாய் லில்லி மயில்வாகனம் (வயது 62), மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா (வயது 11) ஆகியோரும் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஏமாற்ற மாட்டோம் என்று ஜனாதிபதி மஹந்த ராஜபக்ச வாக்குறுதி அளிப்பாரேயானால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்குச் செல்லத் தயாராக இருப்பதாக புதுடெல்லியில் வைத்து தமிழ்த் உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், சுமந்திரன், சுரேஸ் பிறேமச்சந்திரன் போன்றோர் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டிகளிலும் தெரிவுக்குழு தொடர்பாக இந்தியத் தரப்பில் அழுத்தங்கள் கொடுக்கப்படவில்லை என்றே கூறி எஸ்.எம். கிருஷ்ணா கூறியதாக இரா. சம்பந்தன் தகவல் வெளியிட்டிருந்தார். இவையெல்லாம் கூட்டமைப்பைப் பொறுத்வரையில் உற்சாகத்தைக் கொடுத்திருக்கும்.


கூட்டமைப்புத் தலைவர்கள் கொழு முன்னிலையில் கொடுக்கும் உத்தரவாதமா? இதில் முதலாவதான வாய்மொழி உத்தரவாதத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ள வாய்ப்பில்லை என்றே கருதலாம். ஏனென்றால் வாய்மொழி

# இலங்கை அரசு வாக்குறுதியளித்தால் தெரிவுக்குழுவில் இணையத் தயார்

தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருந்தார். அவரது இந்தக் கருத்தில் இருந்து மீண்டும் ஏமாறத் தயாரில்லை என்ற கருத்து உறுதியாக வெளிப்பட்டுள்ளது.

அதேவேளை தெளிவான உறுதிப்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் இருந்து பெற்றுக் கொள்ளாமல் தெரிவுக்குழுவுக்குச் சென்று தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்திய பிரதமர் மன்மோன் சிங்கை சந்தித்த பின்னர்தான் அவர் இவ்வாறு கூறியிருந்தார். இது இலங்கை அரசுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்றே கருதலாம். ஏனென்றால், இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைந்து கொள்ளும் என்று அரசாங்கம் நம்பியிருந்தது. அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்றோர் அந்த நம்பிக்கையை வெளிப்படையாகவே கூறியும் இருந்தனர். அந்த நம்பிக்கை இப்போது உடைந்து போயிருக்கும் என்றே கருதலாம்.



கடந்த மாதம் 20 ஆம் திகதி புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சந்தித்துப் பேசிய சில நாட்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்திய வெளிவிவகார அமைச்சு புதுடெல்லி வருமாறு அழைப்பு விடுத்தது.

அப்போது இந்த அழைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுப்பதற்கானதாக இருக்கலாம் என்றே பரவலாகக் கருதப்பட்டது. அதிலும் குறிப்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே பிரச்சினைகளைத் தீரக்கப் போவதாக அரசாங்கம் கூறிவரும் நிலையில் தெரிவுக்குழுவுக்குச் செல்லுமாறு இந்தியா அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஒருவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா விடுத்த அழைப்பை இலங்கை அரசு விரும்பாது போனாலும் தெரிவுக் குழுவுக்கான அழுத்தம் அவர்கள் மீது கொடுக்கப்படும் என்ற வகையில் பலத்த எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தது.

ஆனால், இந்தியா அத்தகைய அழுத்தங்கள் எதையும் கொடுத்ததாகத் தெரியவில்லை. கொழும்பு திரும்பிய பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சுதந்திரமான சூழலிலேயே பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

அதைவிட நாடாமாளுமன்ற யுள்ளனர்.

இந்தியப் பயணத்துக்கு முன்னதாகவே கூட்டமைப்புத் தலைவர்கள் தெரிவுக்குழுவில் பங்கேற்கத் தயார். ஆனால், தீர்வுக்கான உத்தரவாதத்தை இந்தியா வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

இத்தகைய சூழலில் மீண்டும் ஏமாற்றமாட்டோம், தெரிவுக்குழுவின் ஊடாக நியாயமான தீர்வு ஒன்றை வழங்குவோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உறுதியளித்தால் மட்டுமே தெரிவுக்குழுவுக்கு செல்வோம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது முக்கியமானதாகிறது.

இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவை நிராகரித்துவிட்டு, திடீரென இந்தியப் பயணத்தின் பின்னர், அதில் இணையத் தயார் என்று அறிவிக்க முடியாது. அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது தமிழ் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும்.

இந்த நிலையில் இந்தியாவின் அழுத்தங்களின் பேரில் தெரிவுக் குழுவில் இணைவதற்கு முடிவு செய்வதானால்கூட அதை அவர்களால் உடனடியாக செய்ய முடியாது. ஆனால் அவ்வாறான அழுத்தங்களின் பேரில் கூட்டமைப்பு அந்த முடிவுக்கு வருவதென்றால் ஜனாதிபதியின்

# இந்தியாவிடம் கூறியது கூட்டமைப்பு


உத்தரவாதத்தை ஒரு நிபந்தனையாக வெளிப்படுத்தியிருக்க முடியாது.

புதுடெல்லி பயணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உற்சாகத்தைக்கொடுத்துள்ளதாகவே தோன்றுகிறது.

இலங்கை அரசு தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற விடயத்தில் இந்தியாவுக்கு அதிருப்தி உள்ளது என்பது வெளிப்படை. அதை கூட்டமைப்பினரிடம் இந்தியத் தரப்பு வெளிப்படையாகக் கூறாது போனாலும் அந்த அதிருப்தியை குறிப்புரை முடிந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்னொரு பக்கத்தில் இந்தியாவின் பொறுமைக்கும் எல்லையுண்டு என்று வெளிவிவகார அமைச்சர்

ம்பில் இருந்து புறப்பட முன்னர், இந்தியாவின் அழைப்பாணையின் பேரில்தான் அவர்கள் புதுடெல்லி வருவதாக ஒரு செய்தியாளர் கேள்வி எழுப்பியபோது இந்திய அதிகாரிகள் அந்தக் கருத்தை நிராகரித்தனர். அழைப்பாணை என்ற சொல்லைப் பயன்படுத்த அவர்கள் விரும்பவில்லை. புதுடெல்லி வந்து பேசுபவற்கு தமிழ்க் கட்சி தலைவர்கள் விரும்பினர். எனினும் ஜெனீவா தீர்மானத்தை அடுத்து அவர்களை அழைப்பது சரியில்லை என்பதால்தான், இப்போது அழைத்தோம் என்று அவர்கள் கூறியிருந்தனர்.



தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதுடெல்லியில் உரிய மதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளதாகவே தெரிகிறது.

அதைவிட தமிழர்கள் சுயமரியாதை, கண்ணியம், கௌரவத்துடன் வாழ்வதற்கேற்ற சூழலை உருவாக்க வேண்டியது இந்தியாவின் பொறுப்பு என்றும் மன்மோகன்சிங் உறுதியளித்துள்ளார். இவை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பலமானதொரு நிலையை உருவாக்கியுள்ளதாகவே தெரிகிறது.

அதைவிட தமிழர்கள் இதுவரை ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர் என்ற செய்தி வெளியுலகிற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை இலங்கை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது என்பது அடுத்த கேள்வி. ஏனென்றால் மீண்டும் ஏமாற்றிவிட மாட்டோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உறுதியளித்தால்தான், தெரிவுக்குழுவில் இணைவோம் என்று இரா.சம்பந்தன் கூறியுள்ள நிலையில் அத்தகைய உத்தரவாதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கொடுப்பாரா என்ற கேள்வி உள்ளது.

இதில் ஒரு சிக்கல் உள்ளது. அது என்னவென்றால் அப்படியான உத்தரவாதத்தை எந்தவகையில் பெறுவது என்பதே அது. வெறும் வாய்மொழியான உத்தரவாதமா? அல்லது எழுத்து மூலமான உத்தரவாதமா? மூன்றாம் தரப்பின்

உத்தரவாதங்களால் தமிழ்த் தலைமைகள் ஏமாற்றப்பட்டதே வரலாறாகவுள்ளது.

எழுத்துமூலமான உடன்பாடுகளையே கிழித்தெறிவதில் விண்ணர்களான சிங்கள அரசியல் தலைமைகளிடம் வெறும் வாய்மொழி உத்தரவாதத்தை பெற்றுக்கொண்டு தெரிவுக்குழுவுக்குப்போக கூட்டமைப்பு தயாராகும் என்று நம்பமுடியாது.

அதேவேளை சாதாரணமான ஒரு எழுத்துமூல உடன்பாட்டின் நம்பகத் தன்மையையும் கூட்டமைப்பு சந்தேகிக்கலாம். இத்தகைய சூழலில் இந்தியாவின் முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்படுவதையே கூட்டமைப்பு விரும்புவதாகத் தெரிகிறது.

இறுதித் தீர்வுக்கு இந்தியா உத்தரவாதம் அளிக்குமேயானால் தெரிவுக்குழுவுக்குச் செல்லத் தயாராகவே உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் புதுடெல்லி செல்வதற்கு முன்னதாகவே கூறியிருந்தார். எனவே, இந்தியாவினதும் உத்தரவாதத்தையே அவர்கள் விரும்புவர்.

இத்தகையதொரு இணக்கத்தை ஏற்படுத்துவதில் இந்தியாவுக்கும் சிக்கல் உள்ளது. அதற்கு இணங்குவதில் இலங்கைக்கும் சிக்கல் உள்ளது. அதாவது இத்தகையதொரு உறுதிப்பாட்டை வழங்கு

**கே.சஞ்சயன்**

வது, அதாவது மீண்டும் ஏமாற்ற மாட்டோம் என்று உறுதியளிக்குமாறு இந்தியா எப்படி கேட்கமுடியும்? அப்படி ஒரு வாக்குறுதியை கொடுத்தால், இதுவரை அரசாங்கம் ஏமாற்றியதை ஒப்புக்கொண்டது போலாகிவிடும். இப்படிப்பட்ட நிலையில் இந்தச் சிக்கல் எப்படித் தீரப்போகிறது? பொறுத்திருந்து பாரக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அம்பிகைபாகனின் ஆளுமைத்தடம்' நூல் அறிமுகம்



நாகலிங்கம் வன்னியசிங்கம்
ஓய்வுநிலை அதிபர்
யா/வைத்தீஸ்வரா கல்லூரி

இலங்கைத்தீவின் சிகரம் என விளங்கும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கல்விமான்களில் ச.அம்பிகைபாகனும் ஒருவர் என்பது நாடறிந்த உண்மை. அவரின் பிரியபத்தினி ஸ்ரீமதி நகுலாம்பிகை அம்பிகைபாகன் அவர்களது 90 ஆவது அகவையிலே கொண்டாடப்படும் விழாவிலே **அம்பிகைபாகனின் ஆளுமைத்தடங்கள்** எனும் அரிய நூலை தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளரும் கல்வியியலாளருமான மு.கௌரிகாந்தன் ஆக்கி வெளியிடுகின்றமை பாராட்டுக்குரியது.

எம் மத்தியிலிருந்து மறைந்தும் தமிழ் கூறும் நல்லுலகில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அமரர் ச.அம்பிகைபாகனின் **ஆளுமைத்தடங்களை** இன்றைய இளைய தலைமுறையினரும் அறிந்து தமது வாழ்வியலையும் அவரை முன்னுதாரணமாக கொண்டு வாழ்வதற்குரிய நல்ல நோக்கோடு இந்நூல் வெளிவருவது இரட்டிப்பு மகிழ்வை தருகிறது.

இந்நூல் அமரரின் வாழ்வியலை பல கோணங்களில் ஆராய்கிறது. கல்வி, நிர்வாகப்பணிகள், எழுத்தாக்கப்பணிகள், பதிப்புப்பணிகள், சமயப்பணிகள், பொதுப் பணிகள், அறிவியல் ரீதியான உதாரண புருஷர்களுடனான தொடர்புகள் என்ற தலைப்புகளிலே சுருக்கமாக ஆழமான முறையிலே எழுதப்பட்டுள்ளது.

ச.அம்பிகைபாகன் வைத்தீஸ்வரா கல்லூரியிலே 1935 ஆம் ஆண்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு வரை 33 வருடங்கள் அதிபராக பணியாற்றி பாடசாலையின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் திருப்தி கண்டார்.

உலகிலேயே 33 வருடங்கள் தொடர்ந்து அதிபர் பதவியை தக்க வைத்துக் கொண்டவர் ச.அம்பிகைபாகனை தவிர வேறு எவரும் இருந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகின்றேன்.

இராமகிருஷ்ண மிசனின் நிர்வாகத்தின் கீழ் இருந்த வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அதிபர் பணியை ஏற்று இளைப்பாறும் நாள் வரை பணியாற்றினார். 150 மாணவர்களையும் 7 ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலையை பொறுப்பேற்று திறம்பட வழி நடத்தியதால் ஆயிரத்து 500 மாணவர்களும் 50 ஆசிரியர்களும் கொண்ட 1 ஏபி பாடசாலையாக வைத்தீஸ்வராவை மாற்றிய பெருமை அமரருக்கு உண்டு.

கலை, கலாசார விழுமியங்களை கட்டிக் காத்து மாணவர்களை வழி நடத்தியதால் இவர் காலத்தில் கற்ற மாணவர்கள் நாட்டின் பல பகுதிகளில் உயர் பதவிகளை வகித்தும் சிறப்பாக வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள்.

சென்னையிலே இராமகிருஷ்ண மிசனோடு நெருங்கிய தொடர்பு கொண்டதன் பயனாகவோ என்னவோ இவரது பதவிக் காலத்தில் இந்தியாவின் பிரபலங்கள் என்று கூறக் கூடிய குன்றக்குடி அடிகளார், சுவாமி இராமதாசர், கல்கி, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ம.பெரியசாமி தூரன், இ.வா.ஜெகநாதன் என்போரை அழைத்து வைத்தீஸ்வரா மண்டபத்தில் சொற்பொழிவுகளை ஆற்றச் செய்து ஆன்மீக அறிவுரைகளை மக்கள் கேட்கச் செய்தமையும் பிரபல பாடகி எம்.எல்.வசந்தகுமாரியின் இசைக் கச்சேரியும் மண்டபத்தில் நடைபெற்றது என்பது மகிழ்ச்சியான இன்னுமொரு தகவலாகும்.

ச.அம்பிகைபாகன் பள்ளிப் பணியோடு எழுத்தாக்கப்பணிகளையும் செவ்வனே ஆற்றினார். இலங்கையில் சுவாமி விவேகானந்தர், யோகர் சுவாமிகள், விபுலானந்தர் உள்ளம், கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, கச்சியப்ப கந்தபுராணம், ஒரு தமிழ் நாட்டுக்காப்பியம், யாழ்ப்பாணத்தில் கொச்சிக் கணேசையர் பரம்பரை எனும் அரிய நூல்களை எழுதி வெளியிட்டிருந்தார்.

மாணிக்கவாசகரின் ஆத்மீக யாத்திரை, ஈழநாடும் சைவமும், நாவலரும் கீரிமலைப் புனருத்தாரணமும், ஈழநாட்டில் சித்தர் மரபு, யோகர் சுவாமிகளும் செல்லாச்சி அம்மையாரும், பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி, ஜேர்மன் சுவாமி எனும் கௌரிபாலா நாட்டுக் கோட்டைச் செட்டிமாரின் அரும்பணிகள், சைவ சித்தாந்த சமாஜமும் ஈழநாடும் என்பன போன்ற 50 இற்கும் மேற்பட்ட சமயக் கட்டுரைகளையும் விமர்சனக் கட்டுரைகளையும் எழுதி தமிழ் வளர்த்தார்.

இவை மட்டுமல்ல தமிழ்மொழி வரலாறு சம்பந்தமாக நடைபெற்ற மகாநாடுகளிலும் பல அரிய கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார் என்பதும் வரலாறு கூறும் உண்மையாகும். அவற்றுள் இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றில் சில மைல்கற்கள், ஈழநாடும் தமிழ்ச்சங்கங்களும் நாவலர் கல்விப்பணி, யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக்கல்வியின் வளர்ச்சி, ஒப்பீட்டுச்சமயம் பற்றிய கல்வியில் சேர் பொன்.இராமநாதனின் பங்களிப்பு, சுதேசிய கல்விமுறை, பண்டிதமணியின் ஆற்றல்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

தான் எழுதிய நூல்களையும் கட்டுரைகளையும் விட ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரைகளை மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தார். அதில் முக்கியமானது சுதேச கல்வி முறை, இந்துக்களின் கல்வி வரலாறு என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

20 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் சமய ரீதியாகவும் மொழி ரீதியாகவும் இடம் பெற்ற முக்கியமான விழாக்களுக்கு மூல காரணமாக இருந்தவர் ச.அம்பிகைபாகன் என்று பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை புகழாரம் சூட்டும் அளவுக்கு அமரர் உயர்ந்திருக்கிறார்

ஒரு காலகட்டத்தில் இவர் இல்லாத நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்று பேராசிரியர் சு.வித்தியானந்தன் கூறுமளவுக்கு அமரரின் பிரசன்னம் முக்கியமாக கணிக்கப்பட்டது என்றே கூறலாம்.

அமரர் எழுதிய விபுலானந்தரின் பல்துறைப்பணிகள் என்ற கட்டுரை மட்டக்களப்பு தமிழ் மாநாட்டில் வாசிக்கப்பட்டபோது பேராசிரியர் அமரரை ஆரக்கட்டித்தழுவி முத்தம் கொடுத்த காட்சி சபையை ஆர்ப்பரிக்க செய்தது.

உதாரண புருஷராக வாழ்ந்த அமரரின் ஐந்து பிள்ளைகளும் உலகில் பரந்து விரிந்து தந்தையின் வழியில் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அமரரின் உயர்வுக்கும் வாழ்வுக்கும் பின்புலமாக இருந்து அவரை இந்த நிலைக்கு உருவாக்கிய அவரின் பிரியபத்தினி ஸ்ரீமதி நகுலாம்பிகை அம்பிகைபாகன் 90 ஆவது வயதிலும் தனது பிள்ளைகளது வாழ்வின் சிறப்பைக் கண்டும் அமரரின் நீங்காத நினைவுகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அம்பிகைபாகனின் ஆளுமைத்தடம் எனும் இந்நூலில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் யாவும் முழு மனிதன் என்போனுக்குரிய அத்தனை குணாம்சங்களும் நிறைந்துள்ளன.

அம்பிகைபாகனின் சமய இலக்கிய சமூக, நிர்வாக, பொதுப்பணிகளை ஆராய விரும்புகின்ற முதுநிலைமாணி மாணவர்களுக்கும் ஏனைய உயர்விருதுக்காக ஆராய்ச்சிக்கட்டுரைகளை எழுத வேண்டிய தேவை உள்ளோருக்கும் கலாநிதிப்பட்டங்களுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்வோருக்கும் இந்நூல் ஊன்றுகோலாக, ஏணியாக, தோணியாக உதவும் என்பதில் ஐயமில்லை.

# அரசின் திவிநெகும சட்டமூலத்தால் மாகாணசபை உரிமைக்கு வேட்டு

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையை சர்வதேச அரங்கில் தொடர்ந்தும் அவமானப்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மக்களின் உரிமைகளை பறிக்கும் செயற்றிட்டங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். திவிநெகும சட்டம் தொடர்பில் அரசாங்கம் மீள சிந்திக்க வேண்டும்.

இந்தச் சட்டம் சமுர்த்தி நலன் பெற்றுக் கொள்வோரை வீதியில் நிறுத்தும் வகையில் அமையும். இந்த சட்டத்தின் மூலம் மாகாணசபைகளின் உரிமைகள் பறிக்கப்படும்.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் அரசாங்கம் பொய் கூறி வருவதாக சர்வதேசத்தில் ஓர் நிலைப்பாடு காணப்படுகின்றது. அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்த சட்டத்தின் மூலம் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பில் வரையறைகள் பிறப்பிக்கப்பட உள்ளன. இதன் மூலம் மனிதஉரிமை மீறல்கள் இடம்பெறக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

திவிநெகும சட்டத்திற்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறான ஓர் நிலைமையில் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து அரசாங்கம் மீள சிந்திக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

## தாக்குதல்தாரியை அடையாளம் காண

# 6 இலட்சம் தொலைபேசி அழைப்புக்கள் பரிசீலனை

(கொழும்பு)

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரை தாக்கியவரை கண்டுபிடிப்பதற்காக சுமார் 6 இலட்சம் தொலைபேசி அழைப்புக்களை பரிசீலனை செய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கல்கிஸை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் இந்த தாக்குதல் சம்பவத்தை சாதாரண விடயமாக கருதவில்லை. இது தொடர்பில் துரிதமாக விசாரணைகளை நடத்துவதாக தெரிவித்தனர்.

தாக்குதல்தாரியை அடையாளம் காண்பதற்காக தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் பொருத்தப்பட்டுள்ள தனியாருக்கு சொந்தமான சீ.சீ.டி.வி. கமராக்களை பயன்படுத்தவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்த விசாரணைகள் வெறும் அறிக்கைக்கு மாத்திரம் மட்டுப்படுத்திவிடாமல் குற்றவாளியை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குற்றவாளி குறித்த தகவல்களை வழங்குபவர்களுக்கு சன்மானத்தை வழங்க ஏற்பாடு செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான அறிக்கையை எதிர்வரும் 31 ஆம் திகதி முன்வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(அ-2)



டெங்கு ஒழிப்பு தினத்தை முன்னிட்டு யா/ உரம்பிராய் இந்துக்கல்லூரியில் அண்மையில் சிரமதானப்பணி இடம்பெற்றது. ஊரெழு படைப்பிரிவின் பொறுப்பதிகாரிகளும் படையினரும் கல்லூரிச் சமூகத்தினருடன் இணைந்து இச்சிரமதானப் பணியில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாரிடமும் பாடம் கற்கலாம்

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான்.

அவன் நாட்டு எல்லை விரிந்து பரந்து இருந்தது. பேராசை கொண்ட அவன் பக்கத்து நாட்டைக் கைப் பற்ற நினைத்தான்.

அதற்காகப் பெரிய படையைத் திரட்டினான். எண்ணற்ற வீரர்கள் அவன் தலைமையில் புறப்பட்டார்கள்.

பல நாட்கள் பயணம் செய்ததால் அவர்கள் களைப்பு அடைந்தார்கள். ஓரிடத்தில் கூடாரங்கள் அமைத்துத் தங்கினார்கள்.

அருகிலிருந்த மரத்தில் குரங்கு ஒன்று அமர்ந்திருந்தது. அதன் கை நிறைய ஈச்சம்பழங்கள் இருந்தன. அவற்றை உண்ணலாமா என்று பார்த்துக் கொண்டிருந்தது.

மரத்தின் கீழே ஈச்சம்பழம் ஒன்று கிடப்பதைப் பார்த்தது. கீழே இறங்கிய அது அந்தப் பழத்தை எடுக்க முயன்றது.

கையைத் திறந்ததால் அதன் கையிலிருந்த பழங்களில் சில கீழே விழுந்



தன.

ஒவ்வொரு பழமாக எடுக்க முயன்றது. ஒரு பழம் எடுக்கும்போது அதன் கையிலிருந்து சில பழங்கள் விழுந்தன.

இப்படியே தொடர்ந்து நடந்தது. என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தது அது.

இதைப் பார்த்த அரசனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

அமைச்சரைப் பார்த்து இந்த முட்டாள் குரங்கின் செயலைப் பார்த்தீரா? கை நிறையப் பழங்கள் இருந்தும் அதற்கு மகிழ்ச்சி இல்லையே.

ஒரு பழத்திற்காக கையிலுள்ள பழங்களையும் இழந்ததே. பேராசைதான் இந்தக் குரங்கின் துன்பத்திற்குக் காரணம். நான் சொல்வது சரிதானே என்று கேட்டான்.

அரசே! இந்தக் குரங்கு மட்டும் முட்டாள் அல்ல. இதைப்போன்று செயற்படும் பெரிய மனிதர்களும் உள்ளார்கள்.

இருப்பதைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடையமாட்டார்கள். பேராசையால் அவர்களும் துன்பப்படுவார்கள்.

மற்றவர்களையும் துன்பப்படுத்துவார்கள்.

இந்தக் குரங்கை விட அவர்கள் முட்டாள்கள் என்றார் அமைச்சர்.

தன்னைத்தான் அமைச்சர் குறிப்பிடுகிறார் என்பது அரசனுக்குப் புரிந்தது.

இந்தக்குரங்கிற்கும் எனக்கும் வேறுபாடு இல்லையே.

பெரிய நாட்டிற்கு அரசனாக இருந்தும் மகிழ்ச்சி அடையவில்லையே. சிறிய நாட்டைக் கைப்பற்ற நினைத்தேனே என்று வருந்தினான்.

அவனுக்கு நல்லறிவு தோன்றியது.

போர் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டான். படைகளுடன் தன் நாடு திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகர்களிடம் மோசடி செய்த மொசம்பிக் பிரஜை கைது

(கொழும்பு)

இலங்கை வர்த்தகர்களிடம் கோடிக்கணக்கில் மோசடி செய்த மொசம்பிக் நாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரியளவில் முதலீடு செய்வதாகத் தெரிவித்து செல்வந்த வர்த்தகர்களிடம் குறித்த கும்பல் கோடிக்கணக்கில் பணம் பெற்றுக் கொண்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மொசம்பிக் நாட்டுப் பிரஜைகள் தலைமறைவாகியுள்ளனர். இவர்களை கைது செய்யும் நோக்கில் பொலிஸார் தொடர்ந்தும் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் தங்கியிருந்து இந்த மொசம்பிக் பிரஜைகள் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆயிரத்து 500 மில்லியன் முதலீடு செய்யப் போவதாகத் தெரிவித்து பெண் ஒருவரின் 150 இலட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

மோசடி குறித்து அறிந்து கொண்ட செல்வந்த பெண் வர்த்தகர் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து மொசம்பிக் பிரஜைகளைக் கொண்டமைந்த குழுவின் தலைவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.(அ-2)

# நவராத்திரி

திருமகள் தாயே!
குபேர அதிபதியாய் -குறும் சிரிப்பும்
சாந்த குணமும் மின்னும்- முகமும்
அவதாரங்களில் பவிவிரதையும்...!
கான மயிலாடும்- மாதம்
அடுத்த திரி நாட்களும் - அவள்
அருளே!
எள்,எண்ணெய்- நல்லெண்ணமும்
குத்து விளக்கின் இரண்டாவது-
ஒளியாய்
வந்து அருள் தாரும் அம்மா....!

*எஸ். அகல்யா*
*தரம் 11 C*
*யா/ இந்து மகளிர் கல்லூரி.*



# தேசிய பரீட்சைக்கு ஏழு நாட்களுக்கு முன் அனைத்து வகுப்புக்களும் நிறுத்தம்

## அமுலுக்கு வருகிறது என்கிறார் பந்துல

(கொழும்பு)

**தேசியமட்டப் பரீட்சைகள் நடைபெறும் திகதிக்கு ஏழு தினங்களுக்கு முன்னதாக மேலதிக வகுப்புக்கள், கருத்தரங்குகள், பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவது தடைசெய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையிலிருந்து இந்த புதிய நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளது.

தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தல் நடைபெறும் தினத்துக்கு 48 மணிநேரத்துக்கு முன்னதாக பிரசார நடவடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும் என்ற நடைமுறையை போன்றே பரீட்சை நடைபெறும் திகதியிலிருந்து ஏழு தினங்களுக்கு முன்னதாக சகல மேலதிக வகுப்புகள், பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும்.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை கல்வி அமைச்சு வெளியிடும் தரம் 5 புமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை போன்றவை இப்புதிய நடைமுறைக்கு உள்வாங்கப்படுகிறது.

பரீட்சையொன்று நடைபெறுவதற்கு முதல் நாள் கூட சிலர் விசேட, பிரத்தியேக வகுப்புகள் நடத்துகின்றனர். வினாத்தாள்கள் வெளியாகி விட்டன என்ற பொய் பிரசாரத்தை செய்கின்றனர். வருடக்கணக்காக கல்வி கற்று பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவனை ஒரு சில தினங்களில் குழப்பி விடுகிறார்கள்.

மேலதிக வகுப்புகள், பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள் எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து ஒரு வாரம் வீட்டிலிருந்து அமைதியான முறையில் பரீட்சைக்கு ஆயத்தமாவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கிலும் இப் புதிய நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்படுகின்றது என்றார். (அ-2)

# ஈ-சிற்றியின் பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

E-City ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கில பாடநெறிகளை கற்று வெளியேறிய மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் தனியார் பேருந்து நிலையத்திற்கு முன்பாகவுள்ள மூர்த்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் தலைவர் லயன். ஜெ.றஜீவன் தலைமையில் நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் ஒஸ்மானிக் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம். முபாரக், யாழ்.கல்வி வலய தொழில் வழிகாட்டல் அதிகாரி து.தர்மானந்தசிவம் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என கல்லூரி இயக்குநர் டாக்டர் க்.ஜெயச்சந்திரமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-9)




# வடக்கின் வசந்தம் கிருஷ்ணபுரம் கிழக்கிற்கு வீசாதா?

கிருஷ்ணபுரம் கிராம சேவையாளர் பிரிவில் மூன்று மாதங்களுக்கு முன்னர் மின்சாரம் உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், அரசாங்க அதிபர், கிராம சேவையாளர் எனப்பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். இக் கிராமத்தில் 649 குடும்பங்கள் உள்ளனர். முதற்கட்டமாக 85 பயனாளிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது. இவற்றில் கிருஷ்ணபுரம் மேற்கு, மத்திய வீதி ஆகிய பகுதிகளுக்கு படிப்படியாக மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது.

எஞ்சிய கிருஷ்ணபுரம் கிழக்கில் வசிக்கும் சுமார் 100 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு மின்கம்பம் கூட நாட்டப்படவில்லை. இதற்கான காரணத்தை அறிவதற்கு உரிய அதிகாரிகளிடம் வினவியபோது மின்கம்பம் இல்லை என்றும் வரும் மின்சாரத்தின் அளவு போதாது என்று குறை கூறினார்கள்.

அதன்பின் உயரழுத்த மின்மானி கிளிநொச்சியில் நிறுவப்பட்டது. இம் மின்மானி நிறுவப்பட்டு 2 மாதங்கள் கடந்த நிலையிலும் கிருஷ்ணபுரம் கிழக்கு பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. வடக்கின் வசந்தம் ஆரம்பிக்கப்பட்டதில் இலவசமாக ஒரிரு கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. நாட்கள் செல்லச்செல்ல அதன் நடவடிக்கை குறைந்து தற்போது பூச்சிய நிலையை அடைந்துள்ளது.

இதேவேளை, இப்பிரதேசத்தில் உள்ள மக்கள் பணம் செலுத்தினால் மின்சாரம் தற்போது வழங்கப்படுகிறது. இப்பகுதி வாழ் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருவதால் தம்மால் பணம் செலுத்தி மின்சார இணைப்பைப் பெற முடியாது உள்ளது எனக் கூறி வருகின்றனர். எனவே, வடக்கின் வசந்தத்தின் மூலம் தமக்கு மின்சாரம் கிடைக்குமா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

-பாதிக்கப்பட்ட மக்கள்-

# தொழில்நுட்பங்களால் மனிதர்கள் நோயாளராவது உலகுக்கு சவால்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

புதிய தொழில்நுட்பம் காரணமாக மனிதர்கள் நோயாளர்களாவது இலங்கைக்கு மாத்திரமல்லாமல் முழு உலகிற்கும் பெரும் சவாலாக மாறியுள்ளது என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சு இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் ஒழுங்கு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இச்செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இதன் காரணத்தினால் மருத்துவ விஞ்ஞானத்தில் நாளுக்கு நாள் புதிய கண்டுபிடிப்புக்களும் ஆய்வு மற்றும் சிகிச்சை முறைகளும் அறிமுகமாகி வருகின்றன. பேராசிரியர் சேனக பிபிலேயின் மருந்து பொருட்கள் கொள்கையை நாம் இந்நாட்டுக்கான தேசியக் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளோம். இக்கொள்கை இற்றைக்கு 36 வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இக்கொள்கையை ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்திய போதிலும் பல்வேறு இடையூறு மற்றும் தடங்கல்கள் காரணமாக அக்கொள்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாதுள்ளது.

என்றாலும் எனக்கு இவ்வமைச்சுப் பொறுப்பை கையளிக்கும் போது தேசிய மருந்து பொருட்கள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அந்த ஆலோசனைக்கு ஏற்ப நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன். இதனடிப்படையில் தேசிய மருந்துபொருட்கள் தர ஒழுங்குபடுத்தல் சபை அமைக்கப்பட்டிருக்கின்றது.

இருப்பினும் இக்கொள்கையை சட்ட மூலமாக்குவதற்கான விளைவு சட்ட வரைஞர் திணைக்களத்திடம் 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கையளிக்கப்பட்டுள்ளது. அப்பணிகள் பூர்த்தியாகி வரைவு கிடைக்கப்பெற்றதும் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்படும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் அண்மையில் சர்வதேச உளநல தின நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி சிவகுமாரன் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# பேரணியில் கலந்து கொள்வது குறித்து ஐக்கிய தேசியக்கட்சிக்குள் அமளிதுமளி

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் பேரணியில் கலந்து கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் கட்சியின் செயற்பாடுகளுக்கு எதிரான பேரணி நடத்தப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியையும் தொழிற்சங்கத்தையும் பாதுகாக்கும் இயக்கத்தின் பொதுச் செயலாளர் லாக் பெரேரா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நடைபெறவிருந்த பேரணி குறித்து பிழையான கருத்தை வெளியிட்டு வருகிறது.

இது பிக்குகள் முன்னணியால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்றே தவிர புதிய கட்சி ஒன்றை உருவாக்கும் பேரணி இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். ஜனநாயகம் குறித்து பேசுகின்ற கட்சிக்குள்ளேயே ஜனநாயகம் இல்லை.

அதுடன் தாம் நினைத்தபடி செயற்பட்டு ரணில் விக்ரமசிங்க கட்சியை சீரழிப்பதாகவும் இதற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையை வெறுக்கின்ற உறுப்பினர்கள் இணைந்து பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை பிக்குகள் முன்னணியுடன் சரத் பொன்சேகா இணைந்து ஏற்பாடு செய்துள்ள பேரணியில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை.

உள்நாட்டு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தப் பேரணி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் பாரிய பிளவு ஒன்று ஏற்பட்டுள்ளது.

தமக்கு இந்த பேரணியில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் கட்சியின் நலன் கருதி தாம் இதில் கல ந்து கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இந்த பேரணியில் கலந்து கொள்ளக் கூடாது என்ற கட்சியின் உத்தரவையும் மீறி கருஜெயசூரிய, பாலித்த தேவாரப்பெரும உள்ளிட்ட சில முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானம் மேற்கொள்பவர்கள் வெட்கப்பட வேண்டும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தம்மை கடந்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக நியமித்தமை தாம் விடுத்த தவறு என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுமாக இருந்தால் இது குறித்து கட்சியின் தீர்மானம் மேற்கொள்வர்கள் வெட்கப்பட வேண்டும் என்றார்.

சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக அறிவித்தமை தவறு என்பதை ஏற்றுக் கொள்வதாக நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சரத் பொன்சேகா கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் தமக்கு வாக்களிக்குமாறு கோரிய ஐக்கிய தேசிய கட்சி தற்போது தன்னை பொது வேட்பாளராக்கியமை தாம் விடுத்த தவறு என்று கருதுவது வெட்கக்கேடான விடயம் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான ஒரு கட்சியை எவ்வாறு நம்புவது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, தாம் நடத்தவுள்ள பேரணியில் கலந்து கொள்ள ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களுக்கு தடை விதித்திருப்பதானது ஜனாதீபதி மஹிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையின் பேரில் அமைந்த விடயம் என்று சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் மீளமைப்பு மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு இடையிலும் இதில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## அரசாங்கத்தை குற்றவாளி கூண்டில் நிறுத்த ஒபாமாவை ஆதரியுங்கள்

### ஒபாமாவுக்கான தமிழர் தரப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தை போர்க்குற்றச்சாட்டு கூண்டில் நிறுத்துவதற்கு அமெரிக்காவில் வாழும் தமிழர்கள்,பராக் ஒபாமாவுக்கே வாக்களிக்க வேண்டும் என்று ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள தமது உறுப்பினர்களுக்கிடையிலான கடிதப்பரிமாறலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகத்தின் கீழேயே ஈழத்தமிழர்களுக்கு எதிராக செயற்படும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இதன் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஒபாமாவின் நிர்வாகம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.இதன்மூலம் ஈழத்தமிழர் சுயமரியாதையுடனும்கௌரவத்துடனும் வாழும் சூழலை ஏற்படுத்த ஒபாமாவின் நிர்வாகம் செயற்படும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது.

எனவே, மீண்டும் ஒபாமாவுக்கு வாக்களித்து அவரை அமெரிக்க ஜனாதிபதியாக்க அமெரிக்க வாழ் தமிழர்கள் முன்வர வேண்டும்என்று ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு கோரியுள்ளது. (அ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. கந்தப்பு பரமேஸ்வரன்

(ஆசிரியர் கிளி/கண்ணகை அம்மன் வித்தியாலயம்)



சிறந்த ஆசிரியருக்கான 2012 "பிரதீபா பிரபா" விருதினை அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடமிருந்து 09.10.2012 இல் பெற்றுக் கொண்ட

திரு. கந்தப்பு பரமேஸ்வரன்

அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

Staff Service (கிளிநொச்சி)

ஆசிரிய நண்பர்கள்

(சி/1336)


## குவைத்திலிருந்து ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஈரான், தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்களை சந்தித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

குவைத்தில் நடைபெற்ற ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் அமர்வுகளின் போது சில நாடுகளின் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஈரானின் ஜனாதிபதி முஹமட் அகமட் நிஜாடீனை ஜனாதிபதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்த பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஈரானிய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் உமா ஓயா அபிவிருத்தித் திட்டம் தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

ஈரானின் நிதியுதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம மின்விநியோக திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ஈரான் ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜின்வாஸ் குணவர்தன, ஏ.எச். எம். அஸ்வர் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாய்லாந்து பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.தாய்லாந்து பிரதமர் யின்லுக் சின் வத்தரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்தி கொள்வது குறித்து பேச்சுவார்த்தையில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குவைத்தில் இந்தியப் பிரதமர் மன்மோன் சிங்கை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து பேசக்கூடும் என்று முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்த போதிலும் இந்தியப் பிரதமர் மன்மோன்சிங் இந்த மாநாட்டில் பங்கேற்காததால் இந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தைக் கண்டு இரங்குவது மனித இயல்பு. அதை நீக்குவது தெய்வீகப் பண்பு.
~ எமர்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வழிபாட்டுத் தலங்கள் அமைக்க விசேட அனுமதி பெறும் சட்டம் தேவை

மதமாற்றங்கள், அரச மரங்களிலும் தரையிலும் கடலிலும் சுருவ நிர்மாணங்கள், புதுப்புது ஆலய அமைப்புக்கள் என யுத்தத்திற்கு பின்னான கால ஓட்டம் நகர்கின்றது.

வீடின்றி, உறங்க இடமின்றி, உண்ண உணவின்றி இருப்போர் மீது இரக்கம் கொள்ள ஆளில்லை.

மனிதனை மனிதன் நேசிக்கும் பொருட்டு ஆலய வழிபாட்டுத் தலங்கள் தோற்ற பெற்றனவாயினும் இன்று அந் நிலைமை மாறி மதமாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

இத்தகைய அறியாமைகள் நீண்டு செல்வதை தடுத்து நிறுத்த வேண்டுமாயின், எந்தச் சமயமாயினும் புதிதாக சுருவம் வைத்தல், புதிதாக வழிபாட்டுத் தலம் கட்டுதல் என்பனவற்றை மேற்கொள்வதற்கு விசேட அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான சட்டவாக்கம் கொண்டு வரப்படுவது அவசியமாகும்.

கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு உள்ளூராட்சி அமைப்புகளிடம் அனுமதி பெறுதல் என்ற சட்டங்கள் இருந்தாலும், அனுமதி பெறப்படாமல் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை இடித்தழிக்கும் நடவடிக்கையை உள்ளூராட்சி அமைப்புகள் செய்யத் தவறுவதால் அனுமதி பெற்றுக்கொள்ளாத கட்டிடங்கள் தொடர்கின்றன.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் கட்டுமானப்பணியை ஆரம்பித்து காரியத்தை கனகச்சிதமாக முடிக்கின்ற நடைமுறைகள் தாராளமாக உண்டு.

இந்த நடைமுறைக்குள் சந்திகளில், மர நிழல்களில் வழிபாட்டு உருவங்களை நிர்மாணிக்கின்ற பணியும் கண்டபாட்டில் நடந்தேறுகின்றது.

எனவே, மக்களிடையே மதவாதத்தை தூண்டும் இத்தகைய வன்ம செயல்களை கட்டுப்படுத்த-மதவாதத்தை தூண்டும் நோக்கில் இயங்கும் அமைப்புகளின் செயற்பாடுகளை அடக்க, எந்தச் சமயமாயினும் அந்தச் சமயம் சார்பில் வழிபாட்டுத் தலங்களை நிர்மாணித்தல், சுருவங்கள், உருவங்களை சந்திகளில் நிறுவுதல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு விசேட அனுமதி பெறப்படுவதான சட்டவாக்கம் கொண்டுவரப்பட வேண்டும்.

இத்தகைய சட்டவாக்கம் கொண்டுவரப்படாத பட்சத்தில், அத்தனை சந்திகளிலும் கடவுளர் உருவங்கள் நிறுவப்பட்டிருக்கும். வீட்டிற்கு வீடு வழிபாட்டுத் தலங்கள் கட்டப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் கடவுளின் பெயரால் கூக்குரல்கள் எழும். ஒரு வீட்டில் – ஒரு குடும்பத்தில் பல சமயம் என்ற பிரச்சினை குடும்ப உறவை பாதிக்கும்.

இவையாவற்றினதும் முடிவு இலங்கை திருநாட்டில் போருக்கு ஓய்வு இல்லை. அழிவுக்குத் தடையில்லை. எங்கும் அவலக்குரல்கள் என்பதாய் நிலைமை முடியும். ஆகையால் இது விடயத்தில் பொறுப்பானவர்கள் கவனம் செலுத்துவது கட்டாயம்.

# ஜனாதிபதி மஹிந்தவும் பாக்.பிரதமரும் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பாகிஸ்தானின் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப்பை சந்தித்து கலந்துரையாடினார்.

31 நாடுகள் பங்கேற்கும் ஆசிய ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி குவைத் சென்றுள்ள நிலையில் இந்த சந்திப்பு இடம் பெற்றது.

இலங்கையுடன் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் வர்த்தக தொடர்புகளை தொடர்ந்தும் பேணுவது தொடர்பில் இருதரப்பிலும் கருத்துக்கள் பரிமாற்றப்பட்டுள்ளன.

அத்துடன் பாகிஸ்தானின் உறவை பெரிதும் மதிப்பதாகவும் பாகிஸ்தானிய தனியார்துறையினர் இலங்கையில் முதலீடு செய்வதை வரவேற்பதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் இந்திய அரசாங்க தரப்பில் அவர் இதுவரை யாரையும் சந்திக்கவில்லை. (அ-2)

# கிராம அபிவிருத்திச் சங்கம் இயங்க நடவடிக்கை அவசியம்

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிவபுரம் கிராமத்தில் கிராம அபிவிருத்திச்சங்கம் இயங்காமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்குறித்த கிராமத்தில் 250 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் தமது பிரச்சினைகள் தொடர்பாகவும் கிராமத்தின் அபிவிருத்தி பற்றி கலந்துரையாடவும் கிராம அபிவிருத்திச் சங்கம் நிச்சயமாகத் தேவையாகவுள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களை தெரிவுசெய்து கிராமஅபிவிருத்திசங்கம் இயங்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)

# அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் கண்காணிப்பு

## அரசாங்கம் தெரிவிப்பு

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் இயங்கிவரும் சகல அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பணிப்பாளர்கள் குறித்தும் கண்காணிக்கப்பட்டு வருவதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பணியாளர்கள் குறித்து கண்காணிக்க விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. போர் இடம்பெற்ற காலத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் நாட்டில் பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து வந்தன.

எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதனை தடுக்கும் நோக்கில் அரசசார்பற்ற நிறுவனங்கள் கண்காணிக்கப்படுகின்றன. நாட்டில் இயங்கிவரும் ஆயிரத்து 200 அரசசார்பற்ற நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் மாதாந்தம் கண்காணிப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. மாவட்ட அடிப்படையில் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் பணிகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உலக வரைபடத்தில் இலங்கை என்ற பெயர் அழிந்து விடும்

## ஐ.தே.க. அமைப்பாளர் கன்னங்கர தெரிவிப்பு

நாட்டின் தற்போதைய அரசாங்கத்தின் தூர நோக்கற்ற கொள்கை காரணமாக வெகு நாள் செல்லும் முன்னர் உலக வரைபடத்தில் இலங்கை என்ற பெயரழிந்து இலங்கை சீனாவின் யங்ஹிங் மாகாணமாக மாறிவிடும் என ஐக்கிய தேசியக்கட்சியின் மஹியங்கனை தொகுதி அமைப்பாளர் ஜயந்த கன்னங்கர தெரிவித்துள்ளார்.

மஹியங்கனை ஐக்கிய தேசிய கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போது அரசாங்கம் முழுமையாக சீனாவை தங்கி வாழ்கிறது. மேற்குலக நாடுகள் இலங்கையுடன் இருந்து விலகியுள்ளன. அரசாங்கத்திடம் நிலையான வெளிநாட்டு கொள்கை இல்லாததே இதற்கான காரணமாகும்.

சீனாவின் தேவையானது நேர்மையாக இலங்கைக்கு உதவுவது அல்ல. காரணம் நீண்டகாலத்திற்கு நிலைக்கும் தமது பிரயோசனத்திற்காகவே சீனா இலங்கையில் தனது நிதியை முதலீடு செய்கிறது. அத்துடன் நெருப்பு வட்டியில் சீனா இந்தக் கடன் உதவிகளை வழங்குவதுடன் அரசாங்கம் இலங்கையின் பல தலைமுறைகளை சீனாவிடம் அடகு வைத்து விட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)




மணிவாசகருடைய பாடல்கள் இறைவனுடைய பெருமைகளைக் கூறும் இனிய பாடல்களாகும். தெய்வத்தைப் பற்றிக் கற்பனை செய்து அவர் பாடவில்லை. இறைவனைப் பற்றி அவருக்கு முன்னே வாழ்ந்தவர்கள் பாடியுள்ளனர். பண்டைய தமிழ் இலக்கியங்களும் காப்பியங்களும் பல்வேறு பதிவுகளைச் செய்திருந்தன. பாண்டியன் அரசவையிலே முதன்மந்திரியாகப் பணி செய்தமையால் மணிவாசகருக்கு அவற்றைப் படிக்கும் வாய்ப்பிருந்தது. சமணம், பௌத்தம் போன்ற சமயக் கருத்துக்களும் அக்காலத்தில் மக்களிடையே செல்வாக்கைச் செலுத்தி வந்தன. எனவே மணிவாசகர் சமயக் கருத்துக்களை நன்கு அறியும் நிலையிலே வாழ்ந்தவர். ஆனால் அவர் பெற்ற நேரடி இறையனுபவம் தனித்துவமானது. இறைவனே குருவடிவில் வந்து அவரை நேரில் ஆட்கொண்டார். இறைவன் கொடுத்த நயனதீட்சையும் திருவடி தீட்சையும் மணிவாசகரை புதிய தெய்வ அனுபவத்திற்கு ஆளாக்கிற்று.

மந்திரிப்பணியை மறந்து வழிபாட்டிலே மணிவாசகர் தன்னை முற்றாக இணைத்துக்கொண்டார். அவர் குருவடிவமான இறைவனுடைய வழிகாட்டலில் கோயில் அமைக்க எண்ணம் கொண்டார். குதிரை வாங்கிவரும்படி அரசன் இட்ட பணியை முற்றாக மறந்தார். இது அவருடைய உலக வாழ்வியலைப் புறந்தள்ளி வழிபாட்டுவாழ்வியலை மேற்கொள்ளவைத்தது. ஆனால் இறைவன் சென்றபின்னர் அவர் மனம் வழிபாட்டு வாழ்வியலிலிருந்து வழுவி விட்டது. மீண்டும் உலக வாழ்வியுலுக்குத் திரும்பி விட்டது. அரச பணியை ஏற்கிறார். அதனால் பெருந்துன்பங்களையெல்லாம் எதிர்கொள்கிறார். குதிரை வாங்கி வரவேண்டும் என அரசன் கட்டளையிட அதைச் செயற்படுத்த இறைவழிபாட்டை மீண்டும் நாடுகிறார்.

துன்பம் வரும்போது இறைவனைத் துணைக்கழைப்பது உலக மக்களிடையே இன்றுவரை ஒரு மரபாக உள்ளது. மணிவாசகர் இறையருளால் நரியைப் பரியாக அரசனிடம் சேர்க்கிறார். இந்த அனுபவம் அவருடைய சிந்தையிலே ஒரு தெளிவை ஏற்படுத்துகிறது. வாழ்க்கை என்பது ஓர் ஊன நாடகமென உணர்ந்து கொள்கிறார்.

இறைவனுடைய பெருமையையெல்லாம் நினைத்துப் பார்க்கிறார். தன்னை அவன் வலிய வந்து ஆட்கொண்ட நிலையை எண்ணுகிறார். விண்ணுலகத்தவரும் அறியமுடியாத இறைவனே! வேதங்களின் முடிபாகிய உபநிட தங்களும் முற்காலத்திலிருந்தே ஆய்வு செய்தபோதும் இறைவன் இத்தன்மையன் என அறிய முடியவில்லை. ஏனைய உலகத்தவரும் அறிய முடியாதவன் இறைவன். ஆனால் என்னை நீ இன் னிதாய் வலியவந்து ஆட்கொண்டருளினாயே! என்னை ஊனநாடகம் ஆடச்செய்தாயே! நான் இப்போது ஆனந்தக் கூத்தாடும் மனநிலையை அடைந்துள்ளேன்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

உள்ளம் உருகி உன்னைப் பாடுபவனாக என்னை மாற்றிவிட்டாயே! என்னை ஞான நாடகம் ஆடச்செய்து விட்டாய். இந்த மண்ணுலகிலே என் அறியாமையைப் போக்கவே நீ இவ்வாறு அருள் செய்திருக்கின்றாய்! உன்னுடைய திருவருளை நான் வியக்கிறேன் என இறைவனை அவர் பாடுவது எம்மையும் மெய்சிலிர்க்க வைக்கிறது.

*வான நாடரும் அறியொணாத நீ*
*மறையில் ஈறுமுன் தொடரொணாத நீ*
*ஏனை நாடருந் தெரியொணாத நீ*
*என்னையின்னிதாய் ஆண்டுகொண்டவா*
*ஊனை நாடகம் ஆடுவித்தவா*
*உருகி நானுனைப் பருகவைத்தவா*
*ஞான நாடகம் ஆடுவித்தவா*
*நையவையகத் துடைய விச்சையே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சதுரங்கப்போட்டி

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 7வயது தொடக்கம் 13 வயதுப்பிரிவு ஆண்,பெண் இருபாலாருக்குமான தனிநபர் சதுரங்கம் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனி,ஞாயிறு ஆகிய இரு தினங்களில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் இடம் பெறவுள்ளது.



முல்லைத்தீவு மாவட்ட 21 வயதுக்குரிய தேசிய அணிக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச அணியினை படத்தில் காணலாம்.

# தேசிய மட்டத்துக்கு தெரிவானது யாழ். பிரதேச செயலக அணி













யாழ். மாவட்ட 21 வயதுக்குரிய தேசிய அணிக்கு யாழ்.மாவட்ட பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. விளையாட்டு துறை அமைச்சின் செயற்திட்டத்தின் கீழ் தேசிய காற்பந்தாட்ட அணிக்கு வீரர்களை தெரிவு செய்வதற்காக 21 வயதுக்குபட்ட வீரர்களுக்கான காற்பந்தாட்டப் போட்டி மாவட்ட ரீதியில் நடைபெற்று வருகின்றது.

யாழ். மாவட்ட தேசிய அணிக்கான உதைப்பந்தாட்ட இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் பயிற்சியாளர் பா.முகந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இவ் இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் தகுதிபெற்று மோதிக் கொண்டன. ஒருமணித்தியாலமாக இடம்பெற்ற இப்போட்டி ஆட்டம் தொடங்கி மூன்றாவது நிமிடத்தில் யாழ். பிரதேச செயலக அணியை சேர்ந்த அருள்தாஸ் யூட் கோல் ஒன்றை போட்டார். தொடர்ந்து ஆறாவது நிமிடத்தில் அவராலேயே இன்னொரு கோல் போடப்பட்டது.

தொடர்ந்து 10 ஆவது நிமிடத்தில் யாழ்.பிரதேச செயலகத்தை சேர்ந்த ஜெனட்டால் கோல் ஒன்று போடப்பட்டது. போட்டியின் 20 ஆவது நிமிடத்தில் யாழ்.பிரதேச செயலகத்தை சேர்ந்த நிதர்சனால் ஒரு கோல் போடப்பட்டது.

தொடர்ந்து 24 ஆவது நிமிடத்தில் யாழ். பிரதேச செயலகத்தை சேர்ந்த அருள்தாஸ் யூட்டினால் இன்னுமொரு கோல் போடப்பட்டது. போட்டியின் முதல் பாதியில் 5:0 என்ற கோல் கணக்கில் யாழ்.பிரதேச செயலகம் முன்னிலை வகித்தது. போட்டியின் இரண்டாம் பாதி தொடங்கி 10 ஆவது நிமிடத்தில் யாழ். பிரதேச செயலகத்தை சேர்ந்த மியரூபனால் கோல் போடப்பட்டது. தொடர்ந்து 17 ஆவது நிமிடத்தில் அருள்தாஸ் யூட்டினால் மீண்டும் கோல் போட்டப்பட்டது.

கடைசி 20 ஆவது நிமிடத்தில் உடுவில் பிரதேச செயலகத்தை சேர்ந்த சுபேசனால் ஆறுதல் கோல் ஒன்று அவ் அணிக்காக போடப்பட்டது. இறுதியாக யாழ்.பிரதேச செயலக அணி 7:1 கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலகர் நந்தகோபன் கலந்து கொண்டு சிறப்பித்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்தார்.போட்டியின் சிறந்த வீரராக யாழ்.பிரதேச செயலகத்தை சேர்ந்த அருள்தாஸ் யூட் தெரிவு செய்யப்பட்டார். (படங்கள்:- எஸ்.துவாரகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ் லீக்கில் இருந்து வெளியேறியது கொல்கத்தா



நடைபெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரின் அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இழந்துள்ளது.

நேற்று முன்தினம் இரண்டாவது போட்டியான பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கிங்ஸ்மீட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடக்களமிறங்கிய பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி 14 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.

தொடர்ச்சியான மழை காரணமாக போட்டியை மீள ஆரம்பிக்க முடியாததன் காரணமாக போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாக சைமன் கற்றிச் 32 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், ஷோன் மார்ஷ் 40 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக பிரட் லீ, ஜக்ஸ் கலீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனடிப்படையில் இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட இந்தியன் பிரிமியர் லீக்கின் நடப்புச் சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சம்பியன் லீக்கின் அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்து கொண்டது.

## சச்சினுக்கு உயரிய விருது வழங்க அவுஸ்திரேலியாவில் கடும் எதிர்ப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு அவுஸ்திரேலியாவின் உயரிய விருதினை கொடுக்க அந்நாட்டு எம்.பி.உட்பட பல தரப்பில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

டில்லிக்குச் சென்றிருந்த அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா ஹிலாா்ட், சச்சின் டெண்டுல்கருக்கு அவுஸ்திரேலியாவின் 'ஆர்டர் ஆப் அவுஸ்திரேலியா' விருது வழங்கப்படும் என்று நேற்று முன்தினம் அறிவித்தார்.

இவ்விருது அவுஸ்திரேலிய குடிமகன்களுக்கு மட்டுமே வழங்கப்படும் உயரிய விருதாகும்.

முதன்முறையாக இந்தியருக்கு வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின், ராப் ஒகாஸூட் என்ற சுயேட்சை எம்.பி.ஒருவர், பிரதமர் ஜூலியா ஹிலார்டின் முடிவிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

கிரிக் கெட்டை நேசிக்கிறேன். அதேநேரத்தில் இந்திய கிரிக்கெட் வீரர் சச்சினையும் நேசிக்கிறேன்.

அதற்காக அவருக்கு அவுஸ்திரேலியாவின் கௌரவமிக்க விருதினைக் கொடுப்பது சரியல்ல என்றும் அவுஸ்திரேலியாவில் பிறந்தவருக்கு மட்டும்தான் வழங்கப்பட வேண்டும் என்றார்.

இவரைப் போன்று பல்வேறு விளையாட்டுத்துறை அமைப்புக்களும், அரசில் பிரமுகர்களும் பிரதமர் கிலார்ட்டின் முடிபுக்கு கண்டனம் தெரிவிக்கின்றனர்.

## கௌரவ ஆளுநர் விருது பெறும் கலைஞர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தம் வாழ்நாளில் கலைக்கும், தமிழுக்கும் அரும்பணியாற்றிய வட மாகாண கலைஞர்களுக்கு வழங்கப்படும் உயர் விருதான கௌரவ ஆளுநர் விருது-2012 கீழ்வரும் கலைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

இக்கலைஞர்களுக்குரிய கௌரவ நிகழ்வு யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள தமிழ் இலக்கிய விழாவின் நிறைவு நாளில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விருது பெறும் கலைஞர்களின் விபரம் வருமாறு,

அருளப்பு பேக்மன் (யாழ்ப்பாணம்), சந்தியா அந்தோனி மிராண்டா (மன்னார்), ம.பொனிப்பஸ் தைரியநாதன் (வவுனியா), திருமதி மயில்வாகனம் தவமணி (கரைத்துறைப்பற்று), ம.ந.கடம்பேஸ்வரன் (சுங்காணை), ம.பார்வதிநாதசிவம் (நல்லூர்), வ.செல்லத்துரை (கோப்பாய்), க.கன கேஸ்வரன் (வவுனியா), செ.இராசா (தெல்லிப்பழை), த.ஜெகந்நாதன் (பூநகரி), எம்.பதுகே குணதிலக (வவுனியா-தெற்கு) எம்.ஏ.மொகமட் ஷரிப் (வவுனியா) (ந-8)

## மின்தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு மற்று இணைப்பு வேலைகளுக்காகவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி, நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, சாமியன் அரசடிப் பிரதேசம், சம்மந்தர் கடைப் பிரதேசம், துன்னாலை, குடவத்தைப் பிரதேசம், யாக்கருப் பிரதேசம், கிழவிதோட்டம், இடும்பன் பிரதேசம் ஆகிய இங்களிலும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், யாழ்.மாநகரசபைப்பகுதி, யாழ்.பட்டணப்பகுதி ஸ்ரான்லி வீதி, நாச்சிமார் கோவிலடி முதல் தட்டார்தெரு ஊடாக மனோகரா தியேட்டர் வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைசெய்யப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ந-8)

## இந்தியாவின் கையை மீறியே...

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அச்செவ்வியில் இலங்கை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை பாதுகாப்புத்துறையும் வெளிவிவகார அமைச்சும் 24 மணி நேரமும் உன்னிப்பாக கவனிக்கின்றன.

இலங்கையின் வட பகுதிகளான யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு முதன்முதலாக சென்றுவந்த வெளிவிவகார செயலாளர் என்ற முறையில் சொல்கின்றேன்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பு இல்லை. வீதி புனரமைப்பில் தொடங்கி வீடு கட்டித்தருவது வரை 500 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றை இந்தியாவே செய்து கொண்டிருக்கிறது.

இதேவேளை இலங்கை பாதுகாப்புத்தரப்பினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது துரதிர்ஷ்ட வசமானது.

இது தொடர்பில் 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் வெளிவிவகார செயலாளர் சி.ஆர்.ஜெயசிங்க உள்ளிட்டோருடன் பலகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

ஆனால் ஒரு முடிபுக்கு வராமலேயே அந்தப் பேச்சுவார்த்தை பாதியில் நின்றுவிட்டது. தமிழக மீனவர்களின் சிக்கல்களையும் இலங்கை மீனவர்களின் சிக்கல்களையும் தெளிவாக புரிந்து கொண்டு இரு நாட்டு அரசாங்கங்களும் [illegible] பேசி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வடிவமைத்து கையெழுத்திட்டால்தான் தீர்வு காண முடியும். இப்போது போர் முடிந்து இலங்கையில் அமைதி நிலவுவதால் அதற்கான சாத்தியங்கள் அதிகம்.

இலங்கை என்பது இந்தியாவின் நட்பு நாடு அதனால் அவர்களுக்கு இந்தியா சில உதவிகள் செய்ததாக அறிகிறேன். அண்டை நாடு என்ற முறையில்இந்தியா, இலங்கைக்கு ஆலோசனை கூறமுடியுமே தவிர ஆணையிட முடியாது.

விடுதலைப் புலிகளுடனான போரில் அப்பாவிப் பொதுமக்கள் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படக் கூடாது. போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என இந்தியப் பிரதமர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும் வேண்டுகோள் வைத்தனர்.

நானும் பாதுகாப்புச் செயலாளர் சிவ்சங் [illegible] முறை அலரிமாளிகையில் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து இது தொடர்பாக பேசினோம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமே போர் நடக்கிறது. அப்பாவி மக்கள் மீது எங்களுக்கு என்ன கோபம்? விடுதலைப் புலிகள் மனித கேடயமாக பயன்படுத்திய சில 100 அப்பாவிகள் மட்டுமே இறந்திருக்கிறார்கள் என ஒட்டுமொத்த ராஜபக்ஷ அமைச்சரவையே கூறியது. அதனை இந்தியாவும் நம்பியது. ஆனால் நடந்தது வேறு.

இலங்கைப் போர் முற்றிலும் இந்தியாவின் கையை மீறி நிகழ்ந்ததொன்று. மரணம், எல்லாவித சமாதானத்திற்கும் சமாளிப்புக்கும் அப்பால் பட்டது என்பதை இந்த உலகம் உணர வேண்டும். போரின் போது அப்பாவிகள் பாதிக்கப்படும் துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றார் நிருபம ராவ். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகுகிறார் நித்தியானந்தா!



மதுரை ஆதீனம் அருணகிரிநாதருக்கு சங்கடங்கள், துன்பங்கள் ஏற்படக்கூடிய அள்வில் இருந்தால் மதுரை ஆதீனத்தின் இளைய பீடாதிபதி என்ற பொறுப்பில் இருந்து விலக நித்தியானந்தா தயாராக இருப்பதாகவும், அதுபற்றி இரண்டொரு நாளில் அவர் அதிகாரபூர்வமாக அறிவிப்பார் என்றும் அருணகிரிநாதர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நித்தியானந்தாவுடன் தான் பேசியதாகவும், என்ன காரணத்தால் பதவி விலகுகிறார் என்பதை அவர் அப்போது விளக்குவார் என்றும் அருணகிரிநாதர் தெரிவித்தார்.

மதுரை ஆதீனத்தின் இளைய பீடாதிபதியாக நித்தியானந்தா நியமிக்கப்பட்டது செல்லாது என்றும் அத்தகைய பொறுப்பிற்கு அவர் தகுதியற்றவர் என்றும் தமிழக அரசு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருப்பதால்தான் இந்த முடிபுக்கு அவர் வந்திருக்கிறாரா? என்று கேட்டபோது, ஆம் என்று ஒப்புக்கொண்டார் அருணகிரிநாதர்.

தமிழக அரசு இது போன்று நெருக்கடி கொடுக்கிறது.

நீதிமன்றமும் விரும்பவில்லை. அதனால் தான் அவர் இந்த முடிபுக்கு வந்திருப்பதாக தெரிகிறது என்றார் அருணகிரிநாதர்.

மதுரை ஆதீனத்தை கையகப்படுத்த சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற் கொண்டிருப்பதாக தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து ஆதீன மேமையைவிட்டுப் போய்விடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் இந்த முடிபுக்கு வந்திருப்பதாக கருதலாமா என்று கேட்டபோதே, அது நித்தியானந்தாவின் முடிபு என்றும் அது பற்றி தான் பின்னர் விளக்கமளிப்பதாகவும் மதுரை ஆதீன கர்த்தர் அருணகிரிநாதர் தெரிவித்தார்.

நித்தியானந்தா விலகுவதை அடுத்து மதுரை ஆதீனத்தில் இருந்தே ஒருவரை இளைய ஆதீனமாக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று கேட்டபோது, அதுபற்றி இப்போது கருத்துச் சொல்ல முடியாது என்று மறுத்து விட்டார் அருணகிரிநாதர். (ந-11)


## சித்தா றெஜிபோம் வேக்ஸ்

49 A, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மங்கலகரமான நிகழ்வுகளுக்குரிய றெஜிபோமில் நவீன முறையில் (INDIAN TECHNOLOGY) வடிவமைக்கப்பட்ட எழுத்துக்கள் (ஆங்கிலம், தமிழ், 3D) பூக்கள் , உருவங்கள், ஐசிங் கட்டிங் மற்றும் நீங்கள் விரும்பிய டிசைன்களில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

வர்த்தகர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

தொடர்புகளுக்கு: 0755073064

(சி-1342)



## இலவச உயர்கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

**உலகில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள்**

- வைத்தியர்
- வர்த்தக முகாமையாளர்
- பொறியியலாளர்
- கணக்காளர்
- தகவல்தொழில்நுட்ப முகாமையாளர்
- உளவியல் நிபுணர்

தொடர்பு கொள்ளவும்: 0777570498

**யாழ்ப்பாணம்**
2012 ஒக்ரோபர் 20ம் திகதி -சனிக்கிழமை
யாழ்ப்பாணம் பிள்ளையார் innஇல்
கால்லை 10.30 மணிக்கு

**வவுனியா**
2012 ஒக்ரோபர் 21ம் திகதி -ஞாயிற்றுக்கிழமை
வவுனியா கலாசார மண்டபத்தில்
காலை 10.30 மணிக்கு

கல்வி பயிலுங்கள்
அமெரிக்கா, லண்டன், கனடா, மலேசியா, ஐரோப்பா, நேபாளம் மற்றும் பல நாடுகளில்

(சி-1318)



## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

### திரு. நடராசா பஞ்சாட்சரலிங்கம்



வரணி வடக்கை பிறப்பிடமாகவும் ஆலங்குழாய்வீதி, சண்டிலிப்பாயைவசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராசா பஞ்சாட்சரலிங்கம் அவர்கள்

(ஆசிரியர் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் B.Com, Dip in Edu)

பொருளாளர் -வரணி விநாயகர் சனசமூக நிலையம்

நிர்வாக சபை உறுப்பினர்-வரணி கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்

இன்று 19.10.2012ல் மாவட்ட நீதிமன்றம் மல்லாகத்தில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்வதையிட்டு பெருமையடைகிறோம்.

இளவயதிலிருந்தே சமூக சேவையில் ஆர்வம் கொண்ட இவர், எமது பிரதேசத்தின் முன்னேற்றத்துக்காக முன்னின்று உழைப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மேலும் பல சமூக சேவைகளை ஆற்ற வேண்டும் என்றும் சகல துறைகளிலும் உயர்வுகளை பெற வேண்டும் என்றும் கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்.

நன்றி

*வாழ்த்துவோர்*

1. வரணி விநாயகர் சனசமூக நிலைய நிர்வாகிகள்
2. வரணி கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் தேவஸ்தான நிர்வாகிகள்.

(784)


## துப்பரவற்ற...

கடைசியாக இருந்த இடம்பெயர்ந்தவர்களை அவசரமாக மீளக்குடியேற்றியமை குறித்து நாம் தொடர்ந்து கரிசனை கொண்டுள்ளோம்.

உரிய வதிவிட வசதி, நீர் மற்றும் மலசல கூட வசதிகள் இன்றியும் வாழ்வாதாரத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான வழியின்றியும் வடக்கிலுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மிகவும் துர்ப்பாக்கிய நிலைக்குள்ளான குடும்பங்களை சேர்ந்த பலர் அவசர அவசரமாக துப்பரவு செய்யப்பட்ட காணிகளில் இருத்தி வைக்கப்பட்டுள்ளனர் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-11)

## இந்திய நெசவு...

மண்டபத்தில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவருக்கும் வணிகர் கழக பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

மேலும், அடுத்த வருடம் ஜனவரி மாதம் யாழில் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு முன்பாக இந்திய வர்த்தகக் குழு யாழ்.குடாநாட்டுக்கு வருகை தரும். அந்தக் குழுவின் விஜயத்தின் போது இங்கு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள தொழில்துறைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக யாழ்.இந்திய துணைத் தூதுவர் தெரிவித்தார். (ந-6)

## சில பரிந்துரை...

தப்படாத பரந்துரைகைள் தொடர்பில் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாமல் இருக்கும் நிலையை மாற்றி அமைக்கும் நோக்கில் சட்டத்திருத்தம் செய்யப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்களை வரையறுக்கும் நோக்கில் புதிய சட்டங்கள் உருவாக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## இந்தியாவின் பயிற்சி...

உதவுகிறது.

இந்தியா வழங்கும் அதி உன்னத பயிற்சி காரணமாக இந்த ஆண்டு முதல் இந்தியாவில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ வீரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கு இந்திய மத்திய அரசிடமிருந்து எமக்கு ஒப்புதல் கடிதம் கிடைத்துள்ளது.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா பயிற்சி அளிக்கும் இந்த ஒத்துழைப்பு 50 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கியது என்றும் கூறியுள்ளார். (ந-11)

## ஜனாதி...

எம்மை பயமுறுத்தி, எமது குடும்பத்தினரையும் ஆதரவாளர்களையும் மிரட்டி எமது வெற்றியை கொள்ளையடிக்காதிருந்தால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டிருக்கும்.

விரைவில் வரக்கூடிய சாத்தியமுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கென பொருத்தமான ஒருவரை வளர்த்தெடுக் வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-11)

# நேரில் ஆஜராக அமைச்சர் டக்ளஸுக்கு உத்தரவு



(சென்னை)

தமக்கு எதிரான கொலை வழக்கை வீடியோ கான்பரன்சிங் (இணையவழி தொடர்பாடல்) மூலம் விசாரிக்க கோரிய டக்ளஸ் தேவானந்தாவின் மனுவை சென்னை செசன்ஸ் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தள்ளுபடி செய்ததோடு, அவரை விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த 1985-ம் ஆண்டு சென்னை சூளைமேட்டில் தங்கியிருந்தபோது, ஒரு கொலைச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு சென்னை 4-வது கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் 1991-ம் ஆண்டு டக்ளஸ் தேவானந்தா, இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பிவிட்டார்.

இதையடுத்து அவருக்கு எதிராக பிணையில் வெளிவர முடியாதபடி பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த பிடியாணையை ரத்துச் செய்யக் கோரி, சென்னை செசன்ஸ் நீதிமன்றத்தில், டக்ளஸ் தேவானந்தா மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

அதில், தன்னை வீடியோ கான்பரன்சிங் மூலம் விசாரித்து, தனக்கு எதிரான பிடியாணையை ரத்துச் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த மனுவை தள்ளுபடி செய்யக்கோரி சூளைமேடு பொலிஸ் அத்தியட்சகர் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு மீதான இறுதிக்கட்ட விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய சென்னை செசன்ஸ்நீதிமன்றம், டக்ளஸ்தேவானந்தாவின் மனுவைத் தள்ளுபடி செய்ததோடு, அவரை விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டுள்ளது. (ந-1)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

இவ்வருடம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பிரதீபா பிரபா விருது வழங்கும் நிகழ்வில்

இரண்டாவது தடவையாகவும் முல்லை வலயத்தின் மிகச்சிறந்த அதிபருக்கான விருதைப் பெற்ற எமது கல்லூரி அதிபர் மதிப்பு மிகு P.Kசிவலிங்கம் (Msc,SLPS I) அவர்களையும்



நல்லாசிரியர்களுக்கான இவ் வருட பிரதீபா பிரபா விருதைப் பெற்ற எமது கல்லூரி ஆசிரியர்களான

திருமதி ஜெ. விக்னேஸ்வரன்
(உப அதிபர்,(SLTS 2 II,BAF,Dip in Edu



திரு க. கணேந்திரன்
(SLTS 2 II , B.Com,Dip in Edu



ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம். கல்விபுலகில் இவர்களின் சாதனைப்பயணம் தொடரட்டும்

வாழ்த்துக்களுடன் ஆசிரியர்கள் ஊழியர்கள் மாணவர்கள்
மு/வித்தியானந்த கல்லூரி

(சி-1341)





## YOGI'S

(Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)

குறுகிய கால அழகுக்கலை பயிற்சிகள்
கேக் அலங்கார ஐசிங் பயிற்சிகள்
புதிய வகுப்புகள் 20.10.2012 ஆரம்பமாக உள்ளது.

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**Mrs.Yogini Shanmuganathan**
Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make-up & Character Make-up (India)
Diploma in Advanced Modern Make-up Course with Air Brush Make-up (India)
Diploma in Home Economics (Srilanka)

T.P.: 0777164923, 021 222 2796

(சி-1340)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org